ஸ்ரீ தர்ம சாஸ்தா

(சபரிமலை அய்யப்பன்)



எஸ். குளத்து அய்யர்



"மகர சங்கிரம புண்ணிய தினம், ஸ்திர வாரம், கிருஷ்ண பக்ஷம், பஞ்சமி திதி, உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் மங்கள வாத்யங்கள் முழங்க வேதங்கள் ஒலிக்க, பக்த கோடிகளும், அடியார்களும், தோத்திரப் பாடல்களும், இன்னிசைப் பாடல்களும் பாட, பரசுராமர், அகத்தியர் முதலான மாமுனிவர்களின் முன்னிலையில் ஸ்ரீ அய்யப்பனின் ஜோதிமயமான விக்ரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டது."

ஹரிஹர புத்திரன்—ஸ்ரீ தர்ம சாஸ்தா—ஸ்ரீ அய்யப்பன்—கலியுக வரதன்—பூதநாதன்—ஆரிய தாதா—வீர மணிகண்டன்—மோகினி சுதன்—இவரின் அபூர்வ அவதார மகிமையை விபரமாகச் சொல்கிறது இந் நூல்.

ஸ்ரீ தர்ம சாஸ்தா

(சபரிமலை அய்யப்பன்)



ஆசிரியர் :

கே. எஸ். குளத்து அய்யர்

"சாலு" 9, கிருஷ்ணசாமி தெரு,
அபிராமபுரம் : : சென்னை–600 018

முதற் பதிப்பு: ஜனவரி, 1974.
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி, 1976.

© Copies can be had from the Author:
K. S. KULATHU IYER
"Saalu"
9, Krishnaswami Street,
Abhiramapuram, Madras-18.
Phone: 75292.

அச்சிட்டோர்:
ரெக்ஸ் பிரிண்டர்ஸ்,
சென்னை-4.

உ



ஸ்ரீ தர்மசாஸ்தா துணை

சுவாமியே சரணம் ஐயப்பா

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி

ஸ்ரீ. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களின்

மதிப்புரை

பன்னெடும் காலமாக நம்முடைய பாரத நாடு தெய்வீகத்தில் தோய்ந்து, ஆன்மீக ஒளியை உலகுக்கு வழங்குகின்ற பெருமை படைத்ததாகத் திகழ்ந்து வருகின்றது. ரிஷி முனிவர்களின் தவவலிமையினாலும் ஆச்சார்யர்கள் வேதவேதாகம, பண்டித சிரேஷ்டர்கள் ஆகியோரின் அருளுரைகளாலும், தர்மமும் சுபிட்சமும் நிலவி வந்திருக்கிறது. தெய்வ பக்தியைக் கண்ணெனப் போற்றி மதித்து வழிபடுவதும், பெரியவர்களின் நல்லாசி பெற்று நெறியோடு வாழ்வதையும் நம் கடமையாகக் கொண்டிருக்கிறோம். அருள் சுரந்து நம்மைக் காக்கின்ற தெய்வத்தை நாம் அறியாமல் இருக்கலாமோ?

மனித குலத்தின் மேம்பாடுகள் தெய்வ அருளினுல் ஏற்படுகின்றது என்பதை நாம் அறிவோம். இந்த நாடு புண்ணிய பூமியும் கூட. வாழ்க்கையில் சம்பவிக்கிற இன்ப துன்பங்கள் யாவும் இறைவனுடைய நியமங்கள்தான். ஆதலால்தான் சதாகாலமும் இறைவனுடைய திருவடிகளைத் தொழுது அவனுடைய கீர்த்திகளையும் பெருமைகளையும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து நம்முடைய சிந்தையிலெல்லாம் தெய்வமணம் கமழ்ந்து கொண்டிருக்கச் செய்து வருகிருேம்.

சமீப காலமாக ஸ்ரீ அய்யப்பன் வழிபாடும் பக்தியும் எல்லா வேறுபாடுகளையும் கடந்து மிகுதியாக வளர்ந்தோங்கி வருகிறது. "சரணம் அய்யப்பா" என்று மகாமந்திரமோதி மலையேறும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. சபரிமலை அய்யப்பன் ஸ்ரீ தர்மசாஸ்தாவாக அமர்ந்து நம்மைக் காத்து ரக்ஷிக்கிருர்.

ஸ்ரீ தர்மசாஸ்தாவின் நல்லருளோடு அந்த சக்தி வாய்ந்த தெய்வத்தின் சரிதத்தை நல்ல உள்ளம் படைத்த ஸ்ரீ. கே. எஸ். குளத்து அய்யர் அவர்கள் மிகுந்த சிரத்தையோடும் ஈடுபாட்டோடும் சிறந்த நூலாக எழுதியிருக்கிருர்கள். பலரும் இதுவரை அறியாத பல புதிய செய்திகளை நூலில் படித்து மகிழ்ந்தேன். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களை ஆய்ந்து அவற்ருேடு ஒப்பிட்டு அய்யப்ப வழிபாட்டின் தொன்மைச் சிறப்பை ஆதாரபூர்வமாக இந்த நூலில் ஆசிரியர் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. பொன்னம்பல மேடு, சபரிமலை ஆலயம்,

31-1

கம்பங்குடி வம்சம், தர்மசாஸ்தா திருக் கல்யாணம் போன்ற அத்யாயங்கள் படித்து இன்புறத்தக்கவை. அய்யப்பனேடு எண் பதினெட்டு, நூல் இணைந்து நிற்கிறது. தத்துவங்கள், புராணங்கள், சித்திகள், கீதை அத்யாயங்கள் (எல்லாமே 18 என்று ஆசிரியர் விரிவாக எழுதியுள்ளார்.

இந்த நூலின் முதற்பதிப்பை வெளியிடும் பேறு 74-ல் எனக்குக் கிட்டியது. ஆசிரியர் ஸ்ரீ குளத்து அய்யர் மிக அடக்கத்தோடும் பணி வோடும் ''நான் எழுத்தாளன் இல்லை ; ஏதோ எழுதியிருக்கிறேன்'' என்ருர். உயரிய முறையில் எழுதப்பட்ட இந்த நூலை முழுவதும் படித்து மகிழ்ந்தேன். ஆசிரியருடைய எழுத்து உண்மையிலேயே இருதயத்திலிருந்து பிரவாகித்து வந்திருக்கிறது. அதனுல்தான் எளிமையாகவும், சிந்தனைத் தெளிவாகவும் அமைந்து படிக்கிறவர்களை ஈர்க்கிறமாதிரி அமைந்திருக்கிறது. இதுதான் சத்யமான எழுத்து தெய்வீகமானது. ஆசிரியர் தோற்றத் திலிருந்தே அவர் சீலமானவர் என்பதை அறிந்து கொண்டேன். ஆசிரியர் குளத்து அய்யர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக் களை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். மதிப்புரை வழங்கி நானும் அய்யப்பன் அருள் வேண்டி, நூலையும் ஆசிரியரின் பணியையும் வெகுவாக சிலாகித்து ஸ்ரீ தர்மசாஸ்தா அருள் பாலிக்கப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை
15-2-76

என். கிருஷ்ணசாமி ரெட்டி

உ

ஸ்ரீ அகிலாண்டேசுவரி சகாயம்

பதிப்புரை

மெய் அன்பர்கள் முதற்பதிப்புக்கு தந்த வரவேற்பும், உற்சாகமும், ஆதரவும்தான் என்னை மறுபடியும் அச்சிடத் தூண்டியது. இந்த வெளியீட்டை மெய் அன்பர்களிடம் சமர்ப்பிக்கும் இந்த சமயத்தில் உண்மையாகவே அடியேன் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் — காரணம் — மாவட்ட முதன்மை சமயப் பரப்புநர்கள் இந்த "ஸ்ரீ தர்ம சாஸ்தா — சபரிமலை அய்யப்பன்" நூல் அய்யப்பனைப் பற்றி அறிய சிறந்த வழி காட்டியாக உள்ளது என்றும், நல்ல தரமான நூல் என்றும், அன்பர்களுக்கு வழங்க உபயோகமாக இருக்கிறது என்றும் எழுதியிருக்கிறார்கள். இந்த இரண்டாம் பதிப்பில் பல புதிய தகவல்களைச் சேர்த்து திருத்தி அமைத்திருக்கிறேன்.

இந்த புத்தகம் சிறந்த முறையில் வெளிவருவதற்கு உதவிய நண்பர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவிய நிறுவனங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. மற்றும் மதிப்புரை வழங்கிய கனம் நீதிபதி ஸ்ரீ என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களுக்கு என் மரியாதையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு தந்த "ரெக்ஸ் பிரிண்டெர்ஸ்" நிறுவனத்திற்கும் என் அன்பு கலந்த நன்றி.

குற்றம் நீக்கி குணங்கொள்ளுமாறு ஐயப்ப பெருமானின் அடியார்களின் திருவடிகளில் வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை
18—2—76

கே. எஸ். குளத்து அய்யர்

உ



ஸ்ரீதர்மசாஸ்தா துணை

சுவாமியே சரணம் ஐயப்பா

மஞ்சக்குடி, ப்ரவசன ரத்னாகர, பண்டிதாவதம்ஸ,
கதாப்ரவசன ப்ரவீண, அம்ருதவாக் ப்ரவசனீ,
தத்வாம்ருத வர்ஷீ

ப்ருஹ்ம ஸ்ரீ.

K. ராஜகோபால சாஸ்திரிகள்

அவர்கள் வழங்கிய

முன்னுரை

(முதற் பதிப்பு)

மகா சாஸ்தா துணை

சுவாமியே சரணம் ஐயப்பா

"அந்தப் பிரஷ்டை சாஸ்தா ஜனனம்
சர்வாத்மா சர்வாப் ராஜா
எத்ரைகம் பவந் தீ"—

என்று எந்த இடத்திலே மக்கள் எல்லோரும் ஒருவராக காக்ஷி அளிக்கிறார்களோ, எந்த பரமாத்மா, சகல பிரஜைகளிடத்திலும்

உள்ளத்தில் குடிகொண்டு ஒருவராக இருந்து ஆட்சி புரிகின்ருரோ, அத்தகைய பரமாத்மா வாக்குக்கும், மனதுக்கும் எட்டாத நிலையிலே இருந்தும் மக்களின் பாக்ய விசேஷத்தால் சாஸ்தா என்ற திருநாமம் கொண்டு என்றென்றும் அருள் ஆட்சி புரிகின்ருர் என்று வேதம் அறிவித்து கூறுகிறது. இத்தகைய வேத புருஷனை நாம் கண்டு களித்து சேவித்து அவன் அருள் பெற்று வாழ்வது நமது கடமையாகும். இத்தகைய அருள் பாலிக்கும் தெய்வத்தை அறியாமல் போனேமேயானல் நாற்கால் பிராணிகளைப்போல் பிறந்து, உயிர் வாழ்ந்து மடிந்து போவதுபோல் வீண் பிறப்பு ஆகிவிடும்.

இத்தகைய கொடிய பிறப்பு இறப்பு என்ற துன்பத்திலிருந்து விடுதலை அடைய ஆண்டவன் அருளைத் தேடுவதற்கு அதிகமான பிரயாசைப்படும்போது சுலபமான வழி காட்டுபவர் உளரேயானல் அது நமது பாக்கியமேயாகும்.

பல புராணங்களில் வியாசப் பெருமான் ஐயப்பனின் திரு அருளைப்பெற உபய குல பிரதீபனுய் சைவ வைஷ்ணவ பேதமில்லாத நிலையில் நமது மத தெய்வங்களாகிற அரிக்கும் அரனுக்கும் புத்திரனுகப் பிறந்து பிரகாசிக்கும் ஐயனை பூஜிக்கிறவர்களை சிவனும் விஷ்ணுவும் அருள் பாலிக்கிருர்கள் என்பது புராணசாரம்.

இக்கலியில் சாஸ்தா வந்தனம் செய்து "சரணம் ஐயப்பா" என்ற மகாமந்திரம் ஓதி

அவன் அருள் பெற வேணும். ஸ்ரீ ஐயப்பனின் திரு அருள் பெற்று அந்த புண்ணிய மூர்த்தியின் திருநாமம் கொண்டு தன்னலம் அற்ற உத்தமர் ஸ்ரீ குளத்து அய்யர் அவர்கள் அரும்பாடுபட்டு அநேக புராண சாரங்களை உணர்ந்து ஐயப்ப பக்தர்களுக்கு பெரும் விருந்தும், உடலுக்கும் உயிருக்கும் மருந்தாகவும், பேரின்ப சுகத்தைத் தருவதாகவும் உள்ள ஐயப்பனின் சரித்திரத்தை — நல்ல முறையில் சமைத்துள்ளார்கள். ஐயப்ப பக்த கோடிகள் இந்த "பக்த மணிக்கு" நன்றி செலுத்துவது என்பதும் இந்த புத்தகத்தை ஒவ்வொருவரும் நிதி கிடைத்தது போன்று தியாகத்துடன் பெற்று படித்து ஸ்ரீ தர்ம சாஸ்தா (ஐயப்பனின்) பொற்பாத கமலங்களில் இடைவிடாத பக்தி பண்ணி சகல பாக்கியங்களையும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனும் பூர்ண புஷ்கலா கணவனை வேண்டுகிறேன்.

K. ராஜகோபால சாஸ்திரிகள்

சென்னை – 28. மஞ்சக்குடி
24-12-73

ஸ்ரீ அகிலாண்டேசுவரி சகாயம்

முதற்பதிப்பின் என்னுரை

சுமார் 35 வருஷங்களுக்கு முன் அயல் நாட்டு மருந்து விற்பனை பிரதிநிதியாக நான் வடநாட்டில் பல முறை பயணம் செய்ய நேரிட்டபோது ஒரிசா, பீகார், வங்காளம் முதலிய மாநிலங்களில் பிரபல டாக்டர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அறிமுகம் செய்துகொள்ளும் பொழுது எனது பெயரை குளத்து என்று சொன்னவுடன் அவர்கள் 'முகம்மதியனு?' என்று கேட்டார்கள். குளத்து என்ற பெயரை அவர்கள் அவ்விடம் கேட்டதில்லை. நான் ஹிந்து என்று சொன்னதும் அவர்கள் ஆச்சரியப் பட்டு இந்தப் பெயர் எப்படி வந்தது, எந்த தெய்வத்தின் பெயர் என்று அறிய ஆவல் கொண்டனர். அவர்களிடம் நான் அறிந்திருந்த புராணக் கதையான தேவாசுர யுத்தமும் பின் தேவர்கள் அசுரர்கள் திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்த காலத்தில் மகாவிஷ்ணு மோகினியாக வந்து தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்கச் செய்ததையும் அது சமயம் சிவபெருமான் மோகினியின் உருவத்தைக் கண்டு ஆசைப்பட, அவர்களின் சேர்க்கையால் பிறந்தான் இறைவன், —அவனே அரிகர புத்திரன்— அவனை கேரள நாட்டில் சாஸ்தா என்றும் குளத்துப் பிழை என்ற ஊரில் குளத்தூர் ஐயன் என்ற பாலகனுகவும் கொண்டாடுகிருர்கள். தமிழ் நாட்டில் ஐயனுர் என்று போற்றுகிருர்கள்— என்று இந்தக் கதையை சொன்னதும் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். எனக்கு இந்தக் கதையை பலரிடம் பல தடவை சொன்னதால் மன நிம்மதி ஏற்பட்டது. அது முதல் எனக்கு இந்தக் குளத்தூர் ஐயனின் புனிதக் கதையை விபரமாக

எல்லோருக்கும் தெரியும்படி எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதனால் தர்ம சாஸ்தா—ஐயப்பன் பற்றிய பல நூல்களைப் படிக்கவும் பல பெரியவர்களை இது விஷயமாய் அணுகி அவர்கள் உதவியும் பெற்று அடியேன் அவன் அருளாலே, அவன் தாள் வணங்கி இதை எழுதத் துணிந்தேன். அவன் அருளால் நடவாதது ஒன்றுமில்லை.

இதில், பூதநாதோபாக்கியானம் என்னும் நூலி லிருந்தும் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணத்தி லிருந்தும் மற்றும் சங்ககால நூல்கள் இதர நூல்களி லிருந்தும் கர்ணபரம்பரையாகக் கிடைத்த பல கதைகளி லிருந்தும் திரட்டித் தொகுத்து எழுதியிருக்கிறேன். அவதார புருஷனான ஐயப்பன் பந்தள நாட்டில் தனது லீலை களைச் செய்தாலும் மற்றும் தமிழ் நாட்டில் பல இடங்களில் அவரை பல பெயர்களில் வழிபட்டு வருகிறார்கள். அவை களில் சில இதில் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. அவதார புருஷனின் கதையை எளிய தமிழில், பண்டிதனல்லாத நான் எழுதியிருக்கிறேன். பக்தியுடன் செய்யும் பணி.

இந்த புத்தகம் சிறந்த முறையில் வெளிவருவதற்கு உதவிய நண்பர்களுக்கும், குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ரெக்ஸ் பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றி. நூலுக்கு அணி செய்வதுபோல் முன்னுரை வழங்கிய மஞ்சக்குடி ப்ரம்மஸ்ரீ K. ராஜகோபால சாஸ்திரிகள் அவர்களுக்கு என் மரியாதையையும், வணக் கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறையும் பிழையும் இருந்தாலும் இந்த நூலை எழுதிய வனின் தரம் பார்க்காமல் எழுதப்பட்ட பகவத் விஷயத்தின் கௌரவத்தை பெரிதெனக் கொண்டு என்னை வாழ்த்தி அருளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

சென்னை
3–1–74

கே. எஸ். குளத்து அய்யர்.

பொருளடக்கம்

உ



ஸ்ரீ தர்மசாஸ்தா துணை

சுவாமியே சரணம் ஐயப்பா

அநாதிகாலமாகத் தோன்றிப் பிரகாசித்து வரும் வேதங்களைப் பராசர முனிவருக்கும் யோசனகந்திக்கும் புதல்வராய்த் தோன்றிய வேதவியாச முனிவர் வேதாகமங்களை நன்றாய் ஓதி உணர்ந்து அவைகளை நான்காகத் தொகுத்துக் கொடுத்தார். பின் சனற்குமாரர் (சனகர், சனந்தனர், சாரதனர், சனற்குமாரர்) முனிவரிடம் பதினெட்டுப் புராணங்களையும் கேட்டு அறிந்தார். பின் வியாசர் நான்கு லக்ஷம் சுலோகங் கொண்ட பதினெண் புராணங்களையும், ப்ரும்ம சூத்திரங்களையும் எழுதினார். வேதத்தை ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று நான்காக வகுத்துச் சிஷ்ய பரம்பரை மூலம் பிரசாரம் செய்தார். இவர் ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவர். (அஸ்வத்தாமா, பலிர், வியாஸர், ஹனுமான், விபீஷணன், கிருபா, பரசுராமர் ஆகிய ஏழுவர்). இந்த புராணங்களைத் தேவர்களுக்கு நாரதர் சொன்னார். கந்தர்வர்களுக்கும் ராக்ஷசர்களுக்கும் யக்ஷர்களுக்கும் வியாச முனிவரின் புத்திரன் சுகர் சொன்னார் என்பார்கள். வியாச முனிவரின் முக்கிய சிஷ்யரும் மகாவித்துவானுமான "வைசம்பாயனர்" உலக முழுவதும் பரப்பினர். பிறகு வியாச முனிவரின் மாணவரும் பௌராணிகருமான சூத முனிவர் நைமிசாரணி

யத்தில் சௌனகாதி முனிவர்களின் தலைமையில் ரிஷிகளை யெல்லாம் கூட்டி அவர்களுக்கு இந்தப் பதினெட்டுப் புராணங்களையும் எடுத்துரைத்தார். இந்தப் பதினெட்டுப் புராணங்களில் ஒன்று ''பிரமாண்ட புராணம்''. அதில் கூறப்பட்டுள்ள பூதநாதோபாக்கியானம் என்னும் கலியுக வரதனின் திவ்ய சரித்திரம் அரிக்கும் அரனுக்கும் பிறக்கும் புத்திரன்—தர்மசாஸ்தா—ஸ்ரீ ஐயப்பன். இவரின் அபூர்வ அவதார மகிமையை விபரமாக சொல்லுகிறது.

தமிழ் நாட்டில் இந்திராணிக்கு அபயம் அளித்துக் காத்தருளிய இடமாகிய சீர்காழி தென்பாதித் தெருவில் இன்றும் பிரஸித்தமான சாஸ்தா கோயில் இருக்கிறது. ''கைவிளாஞ்சேரி'' என்று இப்போது பெயர் வழங்கும் இடத்தில் வரம் அளிக்கும் சிறந்த தெய்வமாய் வீற்றிருக்கின்றார். கொள்ளிடக்கரையிலுள்ள ''மெய்யாற்றூர்'' என்ற ஊரில் வடுகநாதர் என்ற சித்தரின் பக்திக்குக் கட்டுப்பட்டு அவ்விடம் தன் ஸான்னித்யத்தை நிலவச்செய்தார். ஆனந்தத்தாண்டபுரத்தில் அய்யனாரை ''திருவரசமூர்த்தி'' என்று கூறி வழிபட்டு வருகிறார்கள். திருச்சிராப்பள்ளி சமீபம் 'திருப்பதட்டூர்' என்ற ஊரில் ''அரங்கேற்றிய அய்யனார்'' என்று போற்றி அழைக்கிறார்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்த மூர்த்தியை 'பீடாபஹாரி' என்று அழைக்கின்றனர். திருநெல்வேலிச் சீமையில் சிங்கம்பட்டி மலையில் சொரிமுத்து அய்யனார் கோவிலும் சீவலப்பேரியில் பூலாவுடையார் ஐயனாரும் இராசவல்லிபுரத்தில் நல்லதம்பி சாஸ்தாவும் எழுந்தருளி அருள் ஆட்சி புரிகிறார்கள்.

கேரளத்தில் ஐயப்பன் பதினெட்டுக் கோயில்களில் எழுந்தருளியுள்ளார். அவற்றுள் குளத்துப்பிழை என்னும் தலத்தில் 'குளத்தூர் அய்யன்' என்ற பாலசாஸ்தா சாலிக் கிராம வடிவிலும் ஆரியங்காவில் பூர்ண, புஷ்கலா சகிதம் குடும்பஸ்தனாகவும், அச்சன் கோயிலின் அரசனாகவும், சபரிமலையில் யோகபட்டம் அணியப்பட்ட ஞானயோக நிலையிலும் எழுந்தருளியுள்ளார். இவரின் அவதார மகிமையையும் அவர் செய்த லீலைகளையும் சூத முனிவர் விபரமாகச் சொன்னார்.

———o———

உ

சுவாமியே சரணம் ஐயப்பா !

அவதார மகிமை

ஸ்காந்தம் என்பது பதினெட்டுப் புராணங்களில் ஒன்று. இதைக் காஞ்சி கச்சியப்ப சிவாசாரியார் என்ற சிவநேசச் செல்வர் கந்த புராணம் என்ற நூலாக எழுதி யிருக்கிறார். அதில் அய்யனார் என்ற சாஸ்தா இடம் பெற்றிருக்கின்றனர்.

முன் கதை

முன்னொரு காலத்தில் 'சூரபன்மன்', 'சிங்கமுகன்', 'தாரகன்' என்ற மூன்று அசுரர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு அசமுகி என்ற சகோதரியும் இன்னும் பல ஆயிரம் அசுர சகோதரர்களும் உண்டு. இவர்கள் சிவபெருமானைக் குறித்துக் கடும் தவம் செய்து அநேக வரங்களைப் பெற்றார்கள்; இறைவனின் அருளால் பெருந்திறல் அடைந்து உலகத்திலுள்ள உயிர்களுக்கும் தேவர்களுக்கும் பெருந்தொல்லை புரிந்து வந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் சூரபன்மனுடைய கட்டளைப்படி பல வகைத் தொழில்களைப் புரிந்து கொண்டு திரிந்தார்கள். தேவர்கள் மீன் சுமந்து வந்து அசுரர்களுக்குப் பலவித பணிவிடை செய்தார்கள். சூரபன்மன் தேவர்களுக்கு அரசனான இந்திரனைப் பிடித்து வரும்படியும் இந்திரனின் மனைவியான அயிராணியையும் கவர்ந்து வரும் பொருட்டு ஒரு படை அனுப்பினான். இந்தச் செய்தியை ஒற்றர்களால் இந்திரன் உணர்ந்தான். தன் மனைவி அயிராணியுடன் பூலோகம் அடைந்து சீர்காழியிலுள்ள இறைவனை வழி பட்டுக்கொண்டு இருந்தார், சூரபன்மனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் சீர்காழி வந்தனர். இதை அறிந்து இந்திரன் தன் மனைவியுடன் மூங்கில் வடிவமாக மாறி மறைந்து கொண்டார். இந்திரனைக் காணாது ஒற்றர்கள் சென்ற பின் தேவேந்திரன் பூஞ்சோலையில் உண்டான. புன்னை,

சண்பகம், பாதிரி, கோங்கு முதலிய மலர்களைக் கொண்டு சிவ பூசனையை முறைப்படி செய்து மகிழ்ந்தான்.

இவ்வாறு சீர்காழியில் தங்கியிருக்கும்போது தேவர் களில் சிலர் இந்திரனைத் தேடிக்கொண்டு இங்கு வந்து கண்டனர். அசுரர்களால் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங் களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். அந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்க என்ன செய்வது என்றும் யோசித்தனர். தேவர்களும் முனிவர்களும் இந்திரனுடன் திருக்கயிலாயமலைக்குச் சென்று சிவபெருமானைக் கண்டு முறையிட்டுக் கொள்வோம் என்று புறப்பட்டார்கள். இதை அறிந்த இந்திராணி தான் தனியாக இருக்க வேண்டும் என்பதை நினைத்துத் தளர்ந்து வருந்தினள். தான் தனியே இருந்தால் அவுணர்கள் வந்து தொல்லை செய்வார்கள் என்றும், அவர்கள் நல்வினை தீவினைகட்கஞ்சாத பொல்லா தவர்கள் என்றும், தன்னைக் காப்பாற்ற யாரும் இல்லை என்றும் இந்திரனிடம் சொன்னாள்.

அரக்கர்கள்,

“ இரக்க மென்று ஒரு பொருள்
இல்லாத நெஞ்சினர்,
அரக்கர் என்று உளர்பலர்
அறத்தின் நீங்கினர் ”

என்று கம்பர் வருணிக்கிறார்.

இந்திரன் அவளுக்குத் தைரியம் சொல்லி, பயப்பட வேண்டாம் என்றும், சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் சேர்ந்து பெற்ற அரிகரபுத்திரன் — ஐயனார் — நமக்கு ஒப்பற்ற துணையாக இருப்பார்; அவரை அன்போடு எண்ணினால் அவர் வந்து காப்பாற்றுவார்; வருந்த வேண்டாம் என்றும் சமாதானம் சொன்னார். இதைக் கேட்ட அயிராணி இந்த ஐயனாருடைய வரலாற்றை அறிய விரும்பினள். இந்திரன் அவளுக்கு இந்த ஐயனின் அவதார மகிமையையும் மற்றும் லீலைகளையும் விபரமாக எடுத்துச் சொன்னான்.

இந்திரன் பவனி

ஒரு சமயம் துர்வாச முனிவர் தேவலோகம் வந்தார். இவர் அத்ரி முனிவர், அனுஸூயா இவர்களின் மூன்ருவது குழந்தை. பிரம்மாவின் அருளால் சந்திரனும், விஷ்ணுவின் அருளால் தத்தாத்திரேயரும், சிவன் அருளால் துர்வாசரும் பிறந்தார்கள்—அருகம் புல்லால் ஜலத்தை அருந்தியதால் துர்வாசர் என்ற பெயர் வந்தது. தவிர பதிவிரதையாகிய அனுஸூயையின் தவத்தின் பலனுல் சிவன் "நானே உன் மைந்தனுக வருகிறேன்" என்று துர்வாசம் (கர்ப வாசம் வசிப்பதற்கு ஏற்ற இடமல்ல) என்று கூறிக் கொண்டு அவள் எதிரில் வந்ததால் அவருக்கு துர்வாசர் என்ற பெயர் வந்தது. (ஸனத்குமார ஸம்ஹிதை.) ஆகவே இவர் சிவனின் அம்சம். சிவன் அருளால் சாபம் அளிக்க அளிக்க இவர் தபம் பெருகும். ஆகவே இவரை கண்டாலேயே யாவரும் நடுங்குவர். இவர் தேவலோகம் வர, தேவேந்திரன் தன் படைசூழ ஐராவதத்தின்மீது பவனி வந்துகொண்டு இருந்தான். எதிர்ப்பட்ட துர்வாச முனிவர் காசியில் காமேசுவரி தேவியுடன் அமர்ந்தருளும் காமேசுவரரை வழிபட்டு அம்பிகையின் திருவருளால் தான் பெற்ற மலர் மாலை ஒன்றை இந்திரனுக்கு ஆசி கூறி அளிக்க அவன் தன் கையிலுள்ள அங்குசத்தால் வாங்கிக் கண்ணிலும் ஒற்ருமல். யானைமீது வைக்க அது அந்த மலரைத் துதிக்கையால் எடுத்துக் காலில் போட்டுத் தேய்த்து விட்டது. அது கண்டு கோபம் அடைந்த துர்வாச முனிவர் மமதை கொண்ட தேவர்களது செல்வங்கள் யாவும் கடலில் மறையவும் வறுமையினுல் வாட்டம் அடையவும் சாபமிட்டார். இந்திரனுடைய செல்வம் பூராவும் கடலில் விழுந்து மறைந்தது. அரக்கர்கள் இந்த வீழ்ச்சியைப் பயன்படுத்தி இந்திர பதவியை அபகரித்துக் கொண்டனர். அராஜகம் அளவுக்கு மீறிவிட்டது இதுகண்டு வருந்திய தேவர்கள், நாராயணமூர்த்தியிடம் சென்று வணங்கி வேண்டினர். அவர் மந்திர மலையை மத்தாகக் கொண்டு கடலைக் கடைந்தால் மறைந்து நீங்கின யாவும் மீண்டும் வந்து தோன்றும்; மரணத்தை வெல்லும் அமிர்தமும் கிடைக்கும் என்று சொன்னர்.

திருப்பாற் கடலைக் கடைதல்

தேவர்கள் தங்களால் கடலைக் கடைய முடியாது என்பதை அறிந்து அசுரர்களுக்கும் ஆசைகாட்டி அவர்கள் உதவியை நாடினர். அவர்களும் அமிர்தம் அருந்தி மரணத்தை வெல்லலாம் என்று எண்ணிச் சம்மதித்தார்கள். இரு கூட்டத்தினரும் சேர்ந்து மந்திர மலையை மத்தாகத் திருப்பாற்கடலில் நிறுத்தி வாசுகி என்ற பாம்பைக் கயிருகக் கொண்டு கடைந்தனர். மீண்டும் யாவும் வந்தன. பிறைச் சந்திரனையும் ஆலகால விஷத்தையும் சிவபெருமானும் கற்பகத் தரு காமதேனு முதலியவற்றைத் தேவேந்திரனும் கௌஸ்துபம் என்னும் மணியையும் மகாலக்ஷ்மியையும் நாராயணமூர்த்தியும் பெற்ருர்கள். இறுதியில் தன்வந்திரி என்ற தேவன் அமிர்த கலசத்துடன் தோன்றினுன். அசுரர்கள் தன்வந்திரிமீது பாய்ந்து அமிர்த கலசத்தை அபகரித்துக் கொண்டனர். தேவர்கள் மீண்டும் நாராயணனைத் துதிக்க அவர் தனது அம்சத்தை ரூபலாவண்யத்தோடு கூடிய மோகினிப் பெண்ணுகத் தோற்றுவித்தார். மதி இழந்த அசுரர்கள் அமிர்த கலசத்தை மோகினியிடம் கொடுக்க அவள் தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்குமாறு செய்தனள். அமிர்தம் உண்ட தேவர்கள் இழந்த பதவியை மீண்டும் பெற்றுச் சுகமாக வாழ்ந்து வந்தனர். எனினும் அவர்களுக்கு 'மகிஷமகி' என்ற ஒரு அரக்கியின் நினைவும் பயமும் இருந்துகொண்டே இருந்தது.

இந்தச் சமயத்தில் திருமாலின் மோகினி அவதாரத்தைக் கேட்ட சிவபெருமான் அதனைத் தான் காண விரும்பி வைகுண்டம் அடைந்தனர். திருச்சடைப் பெருமானின் திருவுள்ளத்தில் 'மகிஷமகி' என்ற அரக்கியை சம்ஹாரம் செய்யும்பொருட்டு ஒரு பாலகனை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணமும் எழுந்தது. நாராயணனும் பூரண அழகு பொலியும் மோகினி உருவெடுத்து நிற்கவும் சிவபெருமான் மோகினியைச் சேர விரும்பினன். திடுக்கிட்ட மோகினி ஓடிச் சென்றதும் விடாமல் ஈசன் துரத்திச் சென்ருர். ஓடிய திருமால் சிவபெருமானை நோக்கி "நான் நாராயணன்; பெண்ணல்ல, ஆண். ஆணைக் கண்டு மையல் கொள்வது புதுமை. இது நேர்மையல்ல" என்று சொன்னுர். அதற்குச் சிவபெருமான் "மாலும் சக்தியும் ஒன்று; நீயும் எனக்கு ஒரு சக்தி; நமக்கு உலகங்களுக்கு நன்மை செய்ய நான்கு சக்திகள் உண்டு.

" போகேபவானீச மரேஷு துர்க்கா
கரோதேசகாளி, த்வவனேது விஷ்ணு: "

என்றவாறு அச்சக்தி எனக்கு மனைவியாய் இருக்கும் போது பவானி என்றும், கோபங்கொண்டபோது காளி என்றும், யுத்தம் செய்யும்போது துர்க்கை என்றும், உலகைக் காக்கும்போது விஷ்ணு என்றும் பெயர் பெறுகின்றது. ஆகவே நீரும் எமக்குச் சக்தியே. தாருக வனத்தில் பிக்ஷாடனமூர்த்தியாய்ச் சென்றபோது என் பக்கத்தில் பெண்ணாக வந்தாய். முன்பு நாம் கூடித்தான் பிரமனைப் பெற்றோம். உன் கோலம் நன்றாய் இருக்கிறது என்று கூறினர்.

" என்றுமாயன் இசைத்தலும் எம்பிரான்
அன்று நீயும் நமக்கொரு சக்திகாண்
அன்று தாருகத்தந்தணர் பாங்குறச்
சென்ற பொழுதினும் சேயிழையாயினை
முன்னைவேதன் முடிந்தனன் போதலும்
உன்னோடே வந்துவப்பொடு கூடினோம்
பின்னர் இந்த பிரமனை உந்தியால்
அன்னையாகி அளித்தனை அல்லையோ!"

என்று கச்சியப்ப சிவாசாரியாரின் கந்த புராணப் பாக்க ளாலும் அறியலாம். இப்படிச் சொல்லி சிவபெருமான் திருமாலின் கையைப் பிடிக்க அவர் நாணிக்கோணி ஓடினர். பின் நாவலந்தீவு என்னுமிடத்தில் சாலமர நிழலில் கூடினர்.

இவர்கள் கூடிய காலத்து உமிழ்ந்த நீரானது "கண்டகி" என்னும் நதியாகப் பெருகியது. அந்நீரில் வச்சிரதந்தி என்னும் புழுக்கள் உள்ளிலேயும், வெளி யிலேயும் ஆழக் குறியோடு பொன் வண்ணமாகத் தோன்றும். அப்புழுக்கள் அவ்வாற்றிலுள்ள மண்ணினால் கூடுகளை உண்டாக்கும். அக்கூண்டினுள் சில நாள் தங்கி யிருந்து இறக்கும். அவை இறந்த பின் அக்கூடுகள் ஆழக்குறியுடையனவாகக் காணப் பெறும். அவைகள் ஆற்றின் கரையில் ஒதுங்கும். அவற்றின் குறிகளைக் கொண்டு சிவபிரான் திருமால் என்று பிரித்தறிந்து வழிபாடு செய்வார்கள். அவைகளை "சாளக்கிரமம்" என்பார்கள்.

அவதாரம்

இப்படி இவர்களின் சேர்க்கையால் ஒரு சக்தி சொரூபம் ஜனிக்க வேண்டும் என்ற இச்சை எழுந்தது. மோகினி சொருபனான அரியும் ருத்ர சொருபனான அரனும் — ஹரிஹர அம்சத்தை — தர்ம சொருபமாய் — தாரகப் பிரம்மமாய் — சச்சிதானந்த வடிவாய் — ஆயிரம் சூரியன் உதித்தாற்போன்ற பிரகாசம் பொருந்திய அழகிய குழந்தை வடிவமாய்த் தோன்றச் செய்தனர்.

"மைக்கருங்கடல் மேனியும் வானுலாம்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கிரத்துடன் ஓர் மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீக்கினான்"

கரிய நிறமும், சிவந்த சடையும், புன்னகை பூத்த முகமும், பரந்த மார்பும், பற்பல ஆபரணங்கள் அணிந்த கண்டமும் உபவீத மணிந்த தோளும், செண்டு என்ற ஆயுதம் கையில் கொண்டு — ஹரிஹர புத்திரனாய் — குளத்தூர் அய்யனாய் — தர்மசாஸ்தாவாய் — மார்கழி மாதம் சனிக் கிழமை பஞ்சமி திதி உத்திர நக்ஷத்திரம் — விருச்சிக லக்னம் கூடிய புண்ணிய தினத்தில் ஸ்ரீ ஐயப்பன் திரு அவதாரம் செய்தருளினர்.

"அங்கண் மேஷ அரிகர புத்திரன்
சங்கையில் பெருஞ் சாரதர் தம்மோடு
எங்குமாகி இருந்தெவ் வுலகையும்
கங்குலும் பகல் எல்லையும் காப்பனால்"

என்று மகா சாஸ்தாவைக் கந்த புராணம் கூறுகின்றது

நமது புராணங்கள் இறைவனின் அதிசய சக்திகளை அடிக்கடி நினைவு ஊட்டுகின்றன. முருகக் கடவுளின் அவதாரமும் அந்த அதிசயங்களில் ஒன்று. சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறியைத் தோற்று வித்து அவைகளைச் சரவணப் பொய்கையில் சேர்ப்பிக்க அப்பொறிகளினால் அருள் வெள்ளம் பொழிகின்ற ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருக்கைகளும் கொண்டு ஆறுமுகக் கடவுள் தோன்றி அருளினார். இதைப் போலத் தான் தர்மசாஸ்தாவின் அவதாரமும் அமைந்தது.

இவ்விதம் அரிகரசுதன் அவதாரம் செய்ததும் அமரர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர்களும் ஞானியர் களும் வேதம் முழங்க பிரம்மா நாமகரணம் செய்தார். பல பெயர்களுள் பிரதானமான பெயர்கள் — பூதநாதன் — தர்மசாஸ்தா—ஆர்யதாதா. அனைவரும் அத்திரு நாமங் களைப் போற்றித் துதித்து வாழ்த்தினர். — ஈசனும் ஈசுவரியும் குழந்தையை எடுத்துக் கொண்டு இடப வாகனத்தில் எழுந்தருளினர். இந்தக் கோலாகலக் காட்சியைக் கண்ட அமரர்கள் ஆனந்தத்துடன் பலமுறை வணங்கினர்.

இந்திராணியைக் காத்தல்

பூதநாதன் கணபதிக்கும் கந்தனுக்கும் பிரியமான தம்பி - உருத்திரர்களுள் ஒருவர். பலவிதமான மேன் மையை உடையவர். தேவர்களும் முனிவர்களும் வணங்கும் சிறப்பைப் பெற்றவர். யாதொரு ஊறுபாடும் உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்வார் என்றெல்லாம் ஐயப்பனின் அவதார மகிமையை இந்திரன் இந்திராணிக்குச் சொன்னான். தர்ம சாஸ்தா பல லீலைகளைச் செய்திருக்கிறார். இந்தத் தர்ம சாஸ்தா உன்னைக் காப்பாற்றுவார் என்று சொல்லி ஐயப்பனை எண்ண, அவர் வெள்ளை யானையின் மேல் தேவியார்களான பூரணை, புட்கலை இவர்களோடு தோன்றினர்.

''காருறழ் வெய்ய களிற்றிடையாகி
பாரிடா எண்ணல் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான்.''

(கந்த புராணம்)

இந்திரன் அவர் பாதங்களில் வணங்கிப் பின் தான் திருக்கயிலை சென்று வருமளவும் இந்திராணியைப் பாதுகாத்து அருள வேண்டும் என்று வேண்டினர். அவரும் அவளைப் பாதுகாப்பதாகச் சொல்லி இந்திரனுக்கு விடை கொடுத்தனுப்பினர்.

இந்திரன் கயிலை சென்றபின் தனியாக இந்திராணி இருந்த சமயம் ஆட்டுத் தலையையுடையவளும் சூரபன் மனின் தங்கையுமான அசமுகி என்னும் அரக்கி அங்கே

வந்தாள். இந்திராணியைத் தூக்கிச் செல்ல அவள் கையை அழுத்தமாகப் பிடித்தாள். உடனே அயிராணி தர்ம சாஸ்தாவை எண்ணிக் கதறிப் புலம்பினாள். அவ்விடம் மறைந்து நடப்பவைகளைப் பார்த்துக் கொண்டு நின்ற அரிகரபுத்திரன் கணங்களில் ஒருவரான "வீரமகா காளர்" என்பவர் தோன்றி அசமுகியை நன்றாய் உதைத்து இந்திராணியைக் காப்பாற்றினார். நிகழ்ந்தவைகளை நாரத முனிவர் மூலம் அறிந்த தேவேந்திரன் தேவர்களோடு சீர்காழி அடைந்தான் வீரமகாகாளரைக் கண்டு போற்றி அவருக்கு விடை கொடுத்தனுப்பினான்.

இவ்வாறு தேவேந்திரன் அரிகரபுத்திரனின் அவதார மகிமையையும் அவர் செய்த லீலைகளையும் எடுத்து ரைத்தான். கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணத்தில் தேவேந்திரன் மூலம் நமக்கு இந்தக் கதையைச் சொல்லுகிறார்.

× × ×

இவ்வாறு ஐயப்பன், பார்வதி பரமேசுரர்களின் அபிமான புத்திரனாய்ச் சந்தோஷமாக வளர்ந்து வந்தான். ஒரு தினம் ஆர்யதாதாவைப் பரமசிவன் அழைத்து மடியில் இருத்திக் கொண்டு அரக்கியான மகிஷிமுகி பெற்ற வரங்களையும் அவளை அழிக்க பூதநாதனாகிய நீ மானிட உருக்கொண்டு வேறொரு மானிடனிடத்தில் பன்னிரண்டு ஆண்டு ஊழியஞ்செய்து அரக்கியைக் கொல்ல வேண்டும் என்றும் சொன்னார். தவிர பந்தள நாட்டை ஆளும் பாண்டிய அரசனுக்கு மகனாக வளர்ந்து பன்னிரண்டு ஆண்டுக் காலம் ஆதிக்கம் செலுத்தி மகிஷிமுகிக்கும் முக்தி அளித்து, பதினெட்டுத் திருக்கோயில் களில் குடிகொண்டு கலியுகம் முடியும்வரை பக்த கோடி களைக் காத்தருள வேண்டும் என்றும் சொல்லி மங்களகர மான வீரமணிமாலையை அவன் மணிகண்டத்திற்கு ரக்ஷாபந்தனமாக அணிவித்து ஆசிர்வதித்தனர். ஆர்ய தாதாவும் தாய் தந்தை தமையன்மார்களை வணங்கி அவர்கள் ஆசிபெற்றுப் பம்பா நதி தீரத்தில் குழந்தை வடிவோடு பந்தள அரசனின் வருகையை எதிர்நோக்கிக் கிடந்தனன்.

———o———

மணிகண்டன்

நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய பந்தள நாடு கேரளத்தில் கோட்டயம் என்ற ஊருக்குப் பதினெட்டு மைல் தூரத்தில் இருக்கிறது. பாண்டிய தேசத்தில் ஒரு பகுதியான இந்த நாட்டை தெய்வ பக்தியும் தர்ம சிந்தனையும் உள்ள "இராஜசேகரன்" என்னும் அரசன் மனுநீதி தவருமல் ஆண்டு வந்தான். இந்த நாடு சீரும் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்று அழகாக விளங்கி வந்தது. அரசனுக்கு எல்லா சௌகரியங்களும் இருந்தும் புத்திரன் இல்லாத குறையால் மனம் வருந்திக் கவலைப் பட்டான்.

பல விரதங்களை ராணியும் அரசனும் மேற்கொண்டார்கள். இப்படி இருக்கையில் காட்டு மிருகங்களால் உபத்திரவம் ஏற்பட, அரசன் ஒரு நாள் தன் மந்திரி முதலான படைசூழ காட்டிற்கு வேட்டையாடச் சென்ருன். வேட்டை முடிந்த பின்னர், பம்பா நதிக்கரையில் இராஜசேகரன் தங்கிச் சிவ தியானத்தில் ஆழ்ந்திருக்கையில் ஒரு குழந்தை அழும் சப்தம் காதில் கேட்டது. கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டின் நடுவே குழந்தையின் குரலைக் கேட்ட பந்தள பூபதி, அதிசயக் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் பரிவாரங்களுடன் காட்டினுள் பல திசைகளிலும் சுற்றிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! பல கோடி சூரிய ஒளியுடனும், திவ்ய தேஜசுடனும் ஒரு ஆண் குழந்தை தனியாக, கைகாலை உதைத்துக் கொண்டு அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான்.

இரத்தின மாலை ஒன்றைக் குழந்தை அணிந்து கொண்டு இருந்தது. அரசனுக்கு ஒரு பக்கம் சந்தோஷம்; ஒரு பக்கம் சந்தேகம். அவன் திகைத்தவனுக நாலு பக்கமும் சுற்றிப் பார்த்துக்கொண்டு நின்ருன். அது சமயம் ஒரு கிழப் பிராமணன் அவ்விடம் தோன்றி, அரசனைப் பார்த்து, 'பூபதியே! குழந்தை இல்லாத உனக்கு இவன் ஏற்ற மகன். பன்னிரண்டு ஆண்டு சென்றபின் இக்

குழந்தையின் மேன்மை தானுக வெளிவரும். ஒப்பற்ற முத்து, மணி, இரத்தினம் இவைகளுடன் நிறைந்த மணியை அணிந்து விளங்குவதால் "மணிகண்டன்" என்ற பெயரிட்டு நீ அவனை வளர்த்து வருவாயாக என்று சொல்லிவிட்டு மறைந்தனர். அரசன் மிகுந்த சந்தோஷத்துடன் குழந்தையை எடுத்து ஆனந்தக் கூத்தாடி, இது தெய்வத்தின் கருணை என்று எண்ணி அரண்மனையை அடைந்தான். நடந்த விவரத்தைப் பட்டமகிஷியிடம் சொன்னுன். குழந்தை இல்லையே என்று ஏங்கி மனம் வாடி நின்ற கோப்பெருந்தேவியின் நெஞ்சம் ஆனந்தத்தால் நிறைந்தது

அநேக தான தர்மங்கள் செய்து கடவுளின் பெருமையைப் போற்றினர்.

அரண்மனையில் மணிகண்டன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். மூன்று வயதில் சௌள கர்மமும், ஐந்தாம் வயதில் வித்யாரம்பமும் செய்தார்கள்.

ஒரு நல்ல ஆசிரியரிடம் மணிகண்டன் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்தி நான்கு கலைகள் யாவும் கற்றுத் தேர்ந்தான். தவிர, அரசர்களுக்குரிய வில் வித்தை, வாள் வித்தை, கம்படி, சிலம்பு, யானையேற்றம், குதிரையேற்றம், ராஜ நீதிகள் இவற்றிலும் தனக்கு நிகர் யாருமில்லை என விளங்கினுன். கல்வி முடிந்து குரு தட்சணை அளிக்கும் சமயம் வந்தது. குரு இவனைக் கடவுள் அம்சம் என்று தெரிந்துகொண்டார். அவர், "நீ தெய்வ அவதாரம் என்று எனக்குத் தெரியும். என்னுடைய மகன் பிறவியிலிருந்து குருடும், ஊமையுமாக இருக்கிருன். உனது அருளால் அவனுக்குற்ற குறையைத் தீர்த்தால் அது நீ எனக்குத் தரும் குரு தட்சணையாகும்" என்று பிரார்த்தித்தார். ஆசிரியர் மீது அன்புகொண்ட மணிகண்டன் அக்குழந்தையின் குறைகளைத் தீர்த்து குருவை மகிழ்வித்தான்.

மணிகண்டனின் அருளால் பந்தள நாடு சீருடனும் சிறப்புடனும் விளங்கியது. குடிகள் குறையின்றி வாழ்ந்தனர். நாடும் நகரமும் மிகவும் செழிப்பாக இருந்தது. பல நாட்கள் கடந்தன. ஒரு நல்ல நாளில் ராஜசேகரனின் மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அக்குழந்தைக்கு ராஜராஜன் என்று பெயர் வைத்தனர். கோப்பெருந்தேவியும், மன்னனும் இரு குழந்தைகளையும் இரு கண்களாகப் பாவித்து அன்பு பாராட்டி வளர்த்து வந்தனர்.

ஆண்டுகள் பல உருண்டன. மணிகண்டன் பன்னிரண்டு வயதுப் பாலகனுனன். மன்னன் மூப்பு அடைந்தான். மணிகண்டனை, அரசன் தனக்கு மூத்த மகனுக நினைத்தான். தனக்குப்பின், நாட்டை ஆள, மணிகண்டனுக்கு இளவரசுப் பட்டம் கட்டத் தீர்மானித்தான். அது தெரிந்த நாடும், நகரமும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது

ஆனல் அந்நாட்டு அமைச்சன் ஒருவனுக்கு மட்டும் பொருமையால், மணிகண்டன் அரண்மனைக்கு வந்த நாள் முதல் அவனைப் பிடிக்கவில்லை எந்தச் சமயத்தில் எப்படி இடைஞ்சல் செய்யலாம் என்று சமயம் பார்த்து வந்தான். மந்தரை கைகேயியிடம், ராமர் பட்டாபிஷேகம் விஷயமாய் எப்படி நடந்து வந்தாளோ, அப்படி இந்த மந்திரியும் சமயம் வரும்போதெல்லாம் ராணியிடம் துர்ப்போதனை செய்து வந்தான்.

“எங்கேயோ கண்டெடுத்த குழந்தைக்கா இளவரசுப் பட்டம்? சொந்தப் புதல்வனுக்குத்தான் பட்டம் கட்ட வேண்டும்” என்றும் ராணிக்கு உபதேசித்தான்.

அதன் விளைவாக மந்திரியும், ராணியும் மணிகண்டனைக் கொல்வதற்காகப் பலவித காரியங்கள் செய்தார்கள். மணிகண்டனின் பொன் மயமான மேனி முழுவதும் பெருஞ் சிரங்குகளும், கொப்புளங்களும் உண்டாயின. பல வைத்தியர்கள் சிகிச்சை செய்தும் பயனில்லை. தீர்க்க முடியாத பிணியையும் தீர்த்து வைக்கும் இறைவன் ஒரு மாறுவேடம் பூண்டு வந்து மணிகண்டனைப் பிடித்திருந்த வியாதிகளை அறவே ஒழித்து, அவன் ஆற்ற வேண்டிய கடமைகளையும் நினைவூட்டி விட்டு மறைந்தான். இதற்குப் பிறகும் மந்திரி ராணியிடம் சில துர்ப்போதனைகளைச் செய்தான். மந்திரியின் ஆலோசனையின் பேரில் மகாராணி தீராத தலைவலியால் அவதிப்படுவதாகக் கூறினுள்.

மந்திரியின் சூழ்ச்சியால் அரண்மனை வைத்தியர்கள் புலிப் பால் கொண்டு வந்து மகாராணிக்கு மருந்து

கொடுத்தால்தான் தலைநோய் தீரும் என்றும், அது தருவித்தால், பிணியை எளிதில் போக்கி விடலாம் என்றும் கூறினர்.

இராஜசேகரன் இடியுண்ட நாகம்போல் துடித்தான். குடிமக்கள் அரசியின் நோய் கேட்டு வருத்தமும், வைத்தியரின் மருந்தைக் கேட்டு அதிசயமும் கொண்டனர்.

மணிகண்டனின் பன்னிரண்டு ஆண்டு சேவக வாழ்வு முடிவினை நெருங்கிற்று. அரசியின் தீராத நோயையும், வைத்தியர்கள் வேண்டிய விசித்திரமான மருந்தையும் அறிந்த மணிகண்டன் தானே காட்டிற்குச் சென்று, புலிப்பால் கொண்டு வருவதாக முன்வந்தான்.

அரசன் தன் அருமை மகனின் வீரத்தை உள்ளூர மெச்சியபோதிலும், விலங்குகளால் தீங்கு வரும் என்று எண்ணிக் காட்டிற்குப் போக அனுமதி தர மறுத்தான்.

மனந்தளராத மணிகண்டன், அரசனைத் தனது வார்த்தைகளால் சமாதானம் செய்து, தான் தனியாகச் சென்று புலிப்பால் கொண்டு வருவதாகச் சொல்லிக் காட்டிற்குப் புறப்பட்டான்.

அரசனும் வேறு வழியில்லாமல் மணிகண்டன் காட்டிற்குப் போகச் சம்மதித்தான். காட்டில் உணவு கிடைப்பது கஷ்டமாகையால் அரசன் ஒரு பையில் தேங்காய், அரிசி, அவல், பொரி முதலிய உணவுப் பொருள்களைக் கட்டி, வில்லும், அம்பும் கொடுத்து மணிகண்டன் தலையில் அக்கட்டையும் வைத்து அனுப்பினான்.

முக்கண் மூர்த்தியான சிவபெருமானைத் தியானித்துக் கொண்டு மணிகண்டன் தன் தாய் தந்தையரையும் பெரியோர்களையும் வணங்கி அவர்களின் வாழ்த்துக்களையும் பெற்று "இரு முடி"யை தலையில் சுமந்து காட்டிற்குப் புறப்பட்டான்.



பொன்னம்பல மேடு

மணிகண்டன் நாட்டின் எல்லையைக் கடந்து காட்டிற்குள் பிரவேசித்தான். பரமசிவனின் ஆணைப்படி நவ வீரர்களில் ஒருவரான வீரபத்திரனும் சிவ கணத்தவர்களுள் ஒருவனுன வாபரனும் ஐயனை எதிர்கொண்டு அழைத்தனர். தாங்கள் மணிகண்டனுக்கு சகாயமாக இருந்து அவர் ஆணையை நிறைவேற்றுகிறோம் என்றும் விண்ணப்பித்தனர். இவர்களுடன் மணிகண்டன் பம்பா நதிக்கரையை அடைந்தான் அவ்விடம் ஆயிரக்கணக்கான முனிவர்கள் தவம் செய்து கொண்டிருந்தனர். மோகினி சுதனுன வீரமணிகண்டன் அவ்விடம் வருவதை அறிந்த அவர்கள், தருமமே உருவான சாஸ்தாவின் தரிசனம் வேண்டி, ஐயனை எதிர்கொண்டழைத்து சிரமீது கரம் உயர்த்தி அவரைச் சுற்றி வலம் வந்து திருவடியைப் போற்றிப் பணிந்தனர். பின் தங்கள் தபோ மகிமையால் அம்மலை உச்சியில் தங்கத்தாலாகிய ஒரு ஆலயம் நிர்மாணித்து மணிகண்ட தேவனை அழைத்து ரத்தினமயமான சிங்காதனத்தில் 'தர்ம சாஸ்தா'வை இருத்தி வேத விதிப்படி அவர் சொருபத்தை பிரதிஷ்டை செய்தனர். அம்மலைச் சிகரமே ''பொன்னம்பல மேடு'' என்றும் ''காந்த மலை'' என்றும் பெயர் பெற்று ஐயன் கோயில் கொண்டுள்ள முக்கியமான ஐந்து ஸ்தலங்களில் ''பொன்னம்பல மேடு'' முதன்மை ஸதானம் பெற்று இயங்குகிறது. இது பம்பா நதி தீரத்திலிருந்து பத்து மைல் தூரம் இருக்கிறது என்றும், இந்த ஆலயத்தை யாரும் பார்த்ததில்லை என்பதும் கர்ண பரம்பரைக் கதை.

மகிஷிமுகிக்குப் பயந்து கொண்டு ஓடி ஒளிந்து கொண்டிருந்த அமரர்கள் பொன்னம்பல மேட்டில் அரிகர புத்திரன் கோயில் கொண்டுள்ளான் என்பதை அறிந்து அவன் திருவடியைத் தஞ்சம் அடைய இவ்விடம் வந்தனர். ஐயனைத் தரிசித்து அவனைப் போற்றி மகிஷிமுகியின் அதர்மச் செயல்களால் தாங்கள் படும் துயரத்தைச் சொல்லி அவனை சம்ஹாரம் செய்ய மோகினி சுதனுன

தங்களால்தான் முடியும் என்றும் விரைவில் அரக்கியைச் சம்ஹாரம் செய்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் சொல்லிப் பணிந்தார்கள்.

இந்த மகிஷிமுகி என்ற அரக்கி யார்? இவள் தேவர்களுக்கு ஏன் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதை அறிவோம்.

இந்த மகிஷிமுகி யார்?

ஒரு சமயம் பூமண்டலத்தில் பக்தி மார்க்கங்கள் மங்கி அறநெறிகள் நிலைகுலைந்தன. தர்மமும் சத்யமும் நிலைக்க வேண்டும் என்பதற்காக மும்மூர்த்திகளும் தங்கள் அம்சங்களைத் திரட்டி ''தத்தன்'' என்ற தேவமகனைப் பூலோகத்திற்கு அனுப்பினர். இதை அறிந்த திருமகளும், மலைமகளும், கலைமகளும் தம் அம்சங்களைத் திரட்டி, ''காலன்'' என்ற மகரிஷிக்கு மகளாகப் பிறக்க, அந்தத் தேவமகள் ''லீலா'' என்ற பெயர் பெற்றுள். இறைவனின் அருளால் தத்தனுக்கும் லீலாவதிக்கும் திருமணம் நடந்தது. இவர்கள் இல்லறத்தில் இருந்து, சிற்றின்பத்தில் மூழ்கி வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் தத்தன் தான் தெய்வாம்சம் என்பதை உணர மனத்தை மும்மூர்த்திகள்பால் செலுத்தி மோன நிலையில் ஒடுங்கினுன். ஆனுல் சிற்றின்பத்தில் நாட்டம் கொண்ட லீலா அவனைத் தடுத்து, தனது வேட்கையைத் தணித்துச் செல்லுமாறு பிடிவாதம் செய்தாள். கோபம் கொண்ட தத்தன் ''சிற்றின்பத்திலேயே உழல விரும்பும் நீ விலங்குகளைப்போல் ஒரு மகிஷி (எருமை) முகத்தோடு பிறப்பாயாக!'' என்று சபித்தான். கற்பிற் சிறந்த லீலாவதி ''மகிஷியாய் நான் பிறந்திருக்கையில் தாங்களும் ஓர் ஆண் எருமையாகப் பிறந்து எனது இச்சையைப் பூர்த்தி செய்வீராக!'' என்று மறு சாபம் அளித்தனள். இன்பம் நுகர்ந்தபின் சாப விமோசனம் உண்டாக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். பின் தங்கள் உற்பவ ஸ்தானத்தை அடைந்தனர்.

தத்தன் கொடுத்த சாபம் பலிக்கத் தொடங்கியது

''தனு'' என்ற அரக்கனுக்கு ரம்பன், கரம்பன் என்ற இரு புத்திரர்கள் இருந்தார்கள். சந்ததி ஏற்படும் பொருட்டுக் கடும் தவம் செய்தார்கள் ரம்பன் பஞ்சாக்கினி மத்தியிலும், கரம்பன் நீர் நடுவிலும் இருந்து பரமேஸ்வரனை நினைத்துத் தவம் செய்தார்கள் இதை அறிந்த

இந்திரன் முதலை ரூபமெடுத்துக் கரம்பனைக் கொன்றான். தனது சகோதரன் இறந்ததை அறிந்த ரம்பன் மனம் வருந்தித் தானும் தீயிற் பாய்ந்து உயிர்விடத் துணிந்தான். அப்பொழுது அக்னி தேவதை அவன் முன் தோன்றி அவனுக்குத் தக்க வரம் கொடுத்து அருளினாள்.

வரம் பெற்ற சந்தோஷத்தில் வரம்பற்ற செயலில் இறங்கிய அரக்கன் ஒரு மகிஷம் (எருமை) மீது மோகம் கொண்டு பாதாள லோகத்தில் வசிக்கலானான். மகிஷம் கருவுற்றது. கர்ப்பம் கொண்ட இந்த எருமையை வேறொரு ஆண் எருமை நெருங்கவும், ரம்பன் கோபம் கொண்டு ஆண் எருமையைத் தாக்கினான். அது ரம்பனைக் கொன்றது. பின்னர் பெண் மகிஷம் ரம்பனைக் கொளுத்தும் சிதையில் குதித்து இறந்தது. அத்தருணத்தில் அச்சிதையிலிருந்து ஒரு ஆண் குழந்தை வந்தது. அக் குழந்தைக்கு அரக்கர்கள் ''மகிஷாசுரன்'' என்று பெயர் இட்டனர். அவன் அரக்கருக்கு அரசனாக விளங்கினான். பின் தவம் புரிந்து தன்னை ஆண்கள் எவரும் கொல்லலாகாது என்ற வரமும் பெற்றான். பெண்களாலும் தனக்கு இறப்பு வரலாம் என்பதை அவன் மறந்து விட்டான். அமரர்களை அடக்கி ஆளத் தொடங்கினான். மகிஷாசுரனைக் கொல்ல மும்மூர்த்திகள் தங்கள் அம்சங்களை ஒன்று சேர்த்து ஒரு அழகான பெண் உருவம் அமைத்தனர்.

பதினெட்டுக் கைகளும், மூன்று கண்களும், மற்ற பிற தேவர்களின் சிறப்பான அம்சங்களும் கொண்டு விளங்கிய தேவியை ''சண்டிகாதேவி'' என்ற பெயரிட்டு மும்மூர்த்திகள் தம்மிடமுள்ள பல ஆயுதங்களையும் கொடுத்து உதவினர். சிங்கத்தின் மீதேறிய தேவிக்கும் எருமை முகம் கொண்ட அரக்கனுக்கும் இடையே கோரமான யுத்தம் நடந்தது. அரக்கன் எளிதில் மடியாததைக் கண்ட தேவி தன் சக்ராயுதத்தைப் பிரயோகித்து அவனைக் கொன்றாள். அரக்கன் பூமியில் பிணமாய் விழ, தேவர்கள் பூமாரி பொழிந்து தேவியைத் துதித்துக் கொண்டாடினார்கள். பக்தர்களுக்கு அருள் பாலித்து விட்டுத் தேவியும் அந்தர்த்தியானமானாள்.

உலகனைத்தையும் காக்கும் ஜகன்மாதா மகிஷாசுரனை அழித்தது கண்டு அவனது சகோதரியும், மகிஷ

முகத்தோடு (எருமை) பிறந்த கரம்பன் புத்திரி, 'கரம்பிகை'' மிகவும் துக்கம் கொண்டாள்.

இந்தக் கரம்பிகை முன் ஜன்மத்தில் லீலாவதியாக இருந்து தத்தன் கொடுத்த சாபத்தால் இப்பொழுது மகிஷ முகத்தோடு கரம்பனின் புத்திரியாகப் பிறந்திருக்கிருள்.

இவள் தேவர்களை வஞ்சம் தீர்க்கக் கங்கணம் கட்டிக் கொண்டாள். நமது புராணங்களில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் அடிக்கடி சண்டை வருகிறது. ஒருவருக்கு மற்றவரை ஒழிப்பதே வேலையாக இருந்தது. விஷ்ணுவின் அருளால் தேவர்கள் அமரராகவே இருந்தனர். தோல்வியுற்ருலும் அவர்கள் இறப்பதில்லை. ஆனுல், அசுரர்கள் வெற்றி பெற்ருலும் இறப்பார்கள்.

தேவர்களைக் கஷ்டப்படுத்துவதும், பழி வாங்குவதும் அரக்கர்களின் இயற்கைக் குணம். ஆகவே மகிஷி நான்முகனைக் குறித்து நெடுங்காலமாகக் கடும் தவம் செய்தாள். தவத்திற்கு இரங்கிய நான்முகன் இவள் முன் தோன்றி ''இறவாமை தவிர வேறு வரங்கள் எது வேண்டுமானுலும் கேள், தருகிறேன்'' என்ருர். அரக்கி அவரைப் பணிந்து தான் தீ, காற்று, நீர், கல், தாவரம் முதலியவை மூலமும் நோயாலும் இறக்கக்கூடாது என்றும், எவனெருவன் சிவபெருமானுன ஹரனுக்கும், நாராயணனுன ஹரிக்கும் பிறக்கின்ருனே, அப்படிப் பிறந்து பூலோகத்தில் மனிதனைப்போல் பன்னிரெண்டு ஆண்டுகள் மனித வாழ்வு வாழ்கின்ருனே, அவனேதான் என்னை அழிக்கச் சக்தியுள்ளவனுக இருக்கவேண்டும் என்றும் வரம் கேட்க, பிரம்மாவும், ''நீ தேவலோகம் முழுமையும் அரசு ஆள்வாய். ஹரிக்கும் ஹரனுக்கும் பிறக்கும் பிள்ளை, பூவுலகில் பனிரெண்டாண்டுகள் மனித வாழ்வு வாழ்ந்தவன்தான் உன்னை அழிப்பான்'' என்றும் வரம் கொடுத்து மறைந்தார்.

அரக்கர்கள் எப்பொழுதும் முடியாத ஒன்றைத்தான் வரமாகக் கேட்பார்கள். ஆனுல் தெய்வம் என்றைக்கும் அதையும் வென்று நிறைவேற்றிவிடும். ஹரி, ஹரன் இருவரும் ஆண் மக்கள். அவர்களுக்கு ஒரு மகவு தோன்ருது. அப்படித் தோன்றினுல் பனிரெண்டு வருடங்

கள் மனிதராக வாழும் காலத்தில் நாம் அவனை அழித்து விடலாம் என்பது மகிஷியின் எண்ணம்.

ஆனால் தெய்வத்தினால் முடியாத காரியம் உண்டோ?

இப்படிப் பல வரங்களைப் பெற்ற மகிஷி தன் உடலினின்றும் எண்ணற்ற அரக்கர்களைத் தோற்றுவித்து, அவர்களோடு இந்திரலோகம் சென்று அமரர்களை அடக்கி ஒடுக்கி ஆண்டுவந்தாள். அந்தச் சமயத்தில் தேவர்கள் மும்மூர்த்திகளைத் தியானம் செய்து நமஸ்கரித்தார்கள். உடன் மும்மூர்த்திகளின் உடல்களிலிருந்து ஒரு தேஜஸ் வெளிக் கிளம்பிற்று. அது ஒரு சுந்தர மகிஷமாக (ஆண் எருமையாக) உருவெடுத்தது.

இவன் முற்பிறப்பில் தத்தனாக இருந்து லீலாவதிக்குச் சாபம் கொடுக்க, அவள் இப்பொழுது மகிஷி (பெண் எருமை முகத்துடன்)யாகவும் இவன் சுந்தர மகிஷமாகவும் பிறந்திருக்கிறார்கள். பின் பரமசிவன் இந்தச் சுந்தர மகிஷத்திடம் அரக்கியாகிய மகிஷிமுகியின் மோக வலையில் சிக்கிப் பூலோகத்திற்குச் சென்று மயக்கி வாழும் படிச் சொன்னார். இதைக் கேட்ட தேவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் இருப்பிடம் திரும்பினர்.

அமராவதி நகரில் கோலாகலமாகக் கொலுவிருந்த மகிஷிமுகியின் காதுகளில் சுந்தர மகிஷத்தின் இனிய குரல் விழுந்தது. அழகிற் சிறந்த ஆண் எருமையைக் கண்டதும் அரசாங்க விஷயத்தை அறவே மறந்து, கூடி மகிழ அதிக ஆசை கொண்டாள். சுந்தர மகிஷமும் தேவ கட்டளையை நினைவிற் கொண்டு, பூலோகத்தில் மகிஷிமுகியுடன் இன்புற்று வாழலானான்.

தனது தகப்பனாரைக் கொன்ற தேவேந்திரனைக் கொன்று பழி வாங்கப் பல கடும் தவம் செய்து அரிய வரங்களைப் பெற்ற மகிஷிமுகி சிற்றின்ப சுகத்துக்கு ஆசைப்பட்டு அதற்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டு, தான் வந்த காரியத்தை மறந்துவிட்டாள்.

தற்காலம் மகிஷிமுகி பூலோகத்தில், சுந்தர மகிஷத்துடன் போக சுகங்களில் மூழ்கிக் கிடந்ததால் இந்திரன் தான் இழந்த பதவியை மீண்டும் பெற்றுச் சுகமாக வாழ்ந்து வந்தான். என்றாலும் மகிஷிமுகியை அழிக்க

வேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டே இருந்தது.

இப்படி, பூலோகத்தில் சுந்தர மகிஷத்துடன் இன்புற்று இருக்கும் நாளில், அசுரர்கள் அவளைச் சந்தித்துத் திரும்பவும் தேவலோகத்துக்கு வரவேண்டும் என்றும், தேவர்களை அழிக்கவேண்டும் என்றும், அவர்களை அழிக்க அவள் பெற்றிருந்த அரிய பல வரங்களையும் நினைவுபடுத்தினார்கள். அவளும் இயற்கைக் குணமான பழிவாங்கும் எண்ணம் நினைவு வரத் தேவலோகம் சென்று தேவர்களைத் துன்புறுத்தினாள்.

சுந்தர மகிஷமும் தன் காரியம் முடிந்ததால் பிரம்ம லோகம் சென்றான். மகிஷிமுகி தேவலோகம் சென்று தேவர்களை யுத்தத்தில் வென்று மீண்டும் அமராவதியில் ஆளத் தொடங்கினாள்.

புராணங்கள், தேவர்கள் சாதாரணமாக அதர்மத்துக்கு அஞ்சும் சுபாவம் கொண்டவர் என்றும், அசுரர்கள் அதர்மத்துக்குக் கொஞ்சமும் பயப்படாத துஷ்டர்கள் என்றும் சொல்கின்றன. அசுரர்கள் தீய கருமங்களிலேயே ஈடுபட்டுச் சந்தோஷப்படுவார்கள். தவம் செய்து பெற்றுவிட்ட வரங்களின் பலத்தினால் உலகத்தைத் துன்புறுத்தும் அசுரர்களைத் தேவர்களால் எதிர்க்க முடியவில்லை.

அரக்கர்களின் அராஜகம் அளவுக்கு மீறிவிட்டது. யாகாதி கர்மங்கள் சரிவர நடத்த முடியவில்லை. தான தர்மங்கள் குறைந்து விட்டன. எங்கும் சத்துவ குணம் நலிந்துவிட்டது.

தேவர்கள் கஷ்டம் தாங்காமல் தேவகுருவை அணுகினார்கள். அப்பொழுது, தேவ குருவாகிய பிரகஸ்பதி—வியாழன்—மகிஷி பெற்ற வரத்தின்படி ஹரிக்கும் ஹரனுக்கும் பிறந்த குழந்தை பந்தள நாட்டு அரசனின் மகனாக வளர்ந்து வந்து பன்னிரெண்டு ஆண்டு மனித சேவகம் செய்து கானகத்தில் வந்திருப்பதாகவும், முனிவர்களும், ரிஷிகளும் தங்கள் தபோ வலிமையால் ஒரு கோயில் கட்டி, "பொன்னம்பல மேடு" என்ற இடத்தில் எழுந்தருளி இருப்பதாகவும், அவரைத் துதித்து, அவர் திருவருளைப் பெற்று உய்யும் மார்க்கத்தை அடையும்படியாகவும் சொன்னார்.

———o———

மகிஷிமுகி சம்ஹாரம்

அமரேந்திரன் தேவர்படை சூழக் கானகம் வந்து பொன்னம்பலத்தை அடைந்தான். சச்சிதானந்த ரூபியாய் எழுந்தருளிய கலியுக வரதனைக் கண்ட தேவர்கள் தங்களது குறைகளைச் சொல்லி முறையிட்டு மெய்யுருகத் துதித்தனர் ஐயன் அவர்களுக்குத் திருவருள் புரிந்து தனது நவ வீரர்களில் ஒருவரான வீரபத்திரனையும் சிவகணத்தவர்களில் ஒருவரான வாபரனையும் மற்றும் தனது சிவகணத்தவர்களையும் அழைத்துக் கொண்டு மகிஷிமுகியை அடக்கி அவளை சம்ஹாரம் செய்ய, அவள் இருக்குமிடம் அடைந்தனர். அசுரப்படைகளும் தேவர் படைகளும் ஒன்ருேடொன்று போரிடத் தொடங்கின. மகிஷி ரதத்தில் புறப்பட்டு தன் எதிரில் ஒரு மானிடன்—அதிலும் ஒரு பாலகன் வில்லும் அம்பும் தாங்கி நிற்பது கண்டு அலட்சியமாகச் சிரித்தாள். மகிஷிமுகி ஆயிரக்கணக்கான உருவங்களைப் பெற்றுக் கோடிக்கணக்கான பாணங்களைத் தொடுத்தாள். ஐயப்பன் அந்தப்பாணங்களைத் தூள் தூள் ஆக்கினன். வீரமணிகண்டன் அரக்கியுடன் மாயப் போர் பல புரிந்து அவளது படைக்கலங்களை உடைத்தெறிந்தான். ஐயப்பனின் வீரத்தைக் கண்டு மகிஷிமுகி அஞ்சினுள். மாயப் போரில் ஐயனை அழிக்க முடியாது என்பதை அறிந்த அரக்கி மல்யுத்தம் செய்ய ஆரம்பித்தாள். ஸ்ரீ ஐயப்பன் கண்இமைக்கும் நேரத்தில் அரக்கியைப் பிடித்துக் கிறுகிறுவென்று சுழற்றிப் பந்தாடுவதுபோல் எறிந்து விளையாடினுன். இறுதியில் பம்பா நதிக்கு மேற்கே ஓடுகின்ற 'அலஸா' நதிக்கரையில் மலைவிழுவது போல் மகிஷி விழுந்து மூர்ச்சித்து செத்தவளைப்போல் கிடந்தாள். அவள் மீண்டும் எழுவதற்குள் ஐயன் மகிஷியின்மீது நின்றுகொண்டு நர்த்தனம் புரியத் தொடங்கினுன்.

தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். தேவ துந்துபிகள் ஒலிக்க வேதங்கள் முழங்க தேவர்கள், முனிவர்கள் வீரமணிகண்டனைக் கரம் உயர்த்தி ஸ்தோத்திரம் செய்தனர். ஈசன், திருமால், நான்முகன் மூவரும் ஐயனை வாழ்த்தி அருளினர்.

வீரமணிகண்டனின் திருவுருவ அழகில் மகிஷி தனது முற்பிறப்புப் பற்றியும் நான்முகனிடம் தான் பெற்ற வரத்தைப் பற்றியும் எண்ணினாள். தன்னை வாட்டும் உருவம் பிரமன் வரத்தை மெய்யாக்க வந்த 'அரிகர புத்திரனே' என உணர்ந்தாள். வீரமணிகண்டனின் திருவடியைச் சேவித்து வணங்கி சாப விமோசனம் கிடைக்கவேண்டும் என்று வேண்டினள். அவள் துதிகளைக் கேட்டு மகிழ்ந்த ஐயப்பன் தன் கரங்களால் அவள் உடல் முழுவதையும் தடவி சிரசைத் தொட்டு அனுக்கிரகித்தனன். உடனே சாபம் நீங்கி தேவ உடல் பெற்று எழுந்தாள். சாபம் தீர்ந்ததும் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டினள். மணிகண்டன், தேவியர்களின் அம்சமான மகிஷிமுகிக்கு மீண்டும் தேவ உடல் கொடுத்ததால் அப்படி ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், தன் சகோதரியாக மஞ்சு மாதா — மாளிகைப்புரத்தம்மன் — என்ற பெயரோடு தனது அருகில் இருக்கலாம் என்றும் தன்னைத் தரிசிக்க வரும் அன்பர்கள் அவளையும் வணங்குவர் என்றும், மாளிகைபுரத்தம்மனாக ஆண்டு வருவாய் என்றும்; எந்த வருஷமாவது தன்னை முதல் முறையாகத் தரிசனம் செய்வதற்குப் பக்தன் வராது இருந்தால் அன்று மணந்து கொள்வதாகவும் ஆறுதல் வார்த்தைகள் சொன்னார்.

மகிஷிமுகியைச் சம்ஹாரம் செய்த மணிகண்டன் தேவர் முனிவர்களுடன் பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருந்தார். அது சமயம் சிவபெருமான் ஐயன் முன் தோன்றி, "மணிகண்டா, இன்னும் உன்னால் பல காரியங்கள் நடக்க வேண்டியிருக்கிறது. நம் பக்தனும் உன் தந்தையுமான பந்தள பூபதி இராஜசேகரன் உன்னை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறான். அவனுக்கு நீ ஞானோபதேசம் செய்து முக்தி அளிக்க வேண்டும். அடுத்துள்ள நீலமலையில் 'சபரி' என்னும் பக்தை ராமாவதாரத்தில் முக்தி பெறாமல் மீண்டும் பிறவி எடுத்து, நிர்குணமூர்த்தியான உன்னை நினைத்துச் சதாசர்வ காலமும் தியானம் செய்து வருகிறாள் அவளை ஆட்கொண்டு சாயுஜ்ய பதவி அளிக்க வேண்டும். இந்த நீலமலை "சபரிமலை" எனப் பெயர் பெறட்டும். அரும் தவசியர்களால் அமைக்கப்பெற்ற இவ் வழகிய கோயிலில், நிர்க்குண ரூபியாய் சத்குண மூர்த்தியாய் மானிடர்க்கு அருள் புரிந்து கலியுக வரதனாய்—அகிலாண்ட கோடி

பிரம்மாண்ட நாயகனாய் விளங்கித் தர்மத்தையும் சத்தியத்தையும் காப்பாற்றி வருவாயாக. உன் தாயின் நோயைத் தீர்ப்பதற்கு வேண்டிய புலிக்கூட்டத்துடன் பந்தளம் புறப்பட்டுச் செல்வாயாக. தேவர்கள் ஆண் புலிகளாகவும் தேவமாதர்கள் பெண் புலிகளாகவும், தேவேந்திரன் நீ எழுந்தருளும் வேங்கையாகவும் உன்னைப் பின் பற்றி வருவார்கள்—பந்தள நாடு சுபிட்சமாக இருக்கும்—அனைவர்க்கும் சர்வ மங்களம் உண்டாகட்டும்'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர்.

'அலஸா நதிக்கரையில் மலைபோல கிடந்த மகிஷியின் உடல் உயிரற்றதாக இருப்பினும் வரம் பெற்ற காரணத்தால் மலைபோல வளர்ந்து ஈரேழு உலகத்திற்கும் அழிவு ஏற்படும்; அதனால் இந்த உடலை பெயர்த்து மூடவேண்டும் என்றும் பிரமதேவன் அவ்விடம் வந்து மணிகண்டனிடம் சொன்னார்.

நான்முகனின் நன்மொழியைக் கேட்டு மணிகண்டன் தனது காலின் பெருவிரலால் மகிஷியின் உடலைத் தூக்கித் தள்ளினார். அது அலஸா நதி தீரம் சென்று விழுந்தது. அமரர்கள் ஆளுக்கு ஒரு கல்லை எடுத்து வீசி அவ்வுடலை மூடி மறைத்தனர். அவ்விடம் ''கல்லிடுங்குன்று'' எனப் பெயர் பெற்றது. தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் அலஸா நதியில் குளித்து ஒரு கல்லை எடுத்து அலஸா மேட்டில் எறிந்து வருகிறார்கள்.

மணிகண்டன் பூதங்களின் தலைவனான வாபரனைதான் பந்தள தேசம் சென்று வரும் வரை இக்காட்டில் இருந்து பக்தர்களை வனவிலங்கு, அரக்கர்கள் இவர்களிடமிருந்து காக்க ஒரு கோட்டையாக நிலைத்து இருக்கவேண்டும் என்றும் சொல்லிச் சென்றார். இந்த இடத்திற்கு ''மகிஷி மாரி வாகனம்'' எனப் பெயர். இதுவே ''எருமேலி'' எனப்படுவது. தன்னைக் காணவரும் பக்தர்கள் முதலில் வாபரனை வணங்கி வழிபட்ட பின்னர்தான், தன்னை அடைய வேண்டும் என்றும் அனுக்கிரகித்தார். பூதங்களைக் காட்டிலேயே வாபரன் தலைமையில் நிறுத்திவிட்டு அமரர்களையும் முனிவர்களையும் அனுக்கிரகித்தார்.

———o———

கம்பங்குடி வம்சம்

சபரிமலைச் சாரலைச் சுற்றியுள்ள பல இடங்களுள் 'கரந்தையர் பாளையம்' என்னும் இடம் ஒரு முக்கிய தல மாகும். அங்கு எந்நேரமும் இறைவனின் சிந்தனையில் ஒரு அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் எப்பொழுதும் இறைவனையும் அவர் அடியார்களையும் போற்றி வணங்கி வந்தார். எந்நேரமுப் ''நமசிவாய'' மந்திரத்தை மனத் திலே நிலையாகக் கொண்டிருந்தார். கணவனும் மனைவியும் இல்லறமெனும் நல்லறத்தை அறநெறி வழுவாது இனிது நடத்தி வந்தனர். அடியார்களுக்குப் பாதபூஜை முதலானது செய்து அறுசுவை அமுது ஊட்டி விருந்தினரைப் போற்றி வாழ்ந்து வந்தனர் அவ்வந்தணச் செல்வர்களை ஆட்கொண்டருள மணிகண்டன் திருவுள்ளம் கொண்டார். அவர்கள் குடிலில் நின்று குரல் கொடுத்தார். ஐயன், பாலகன் குரல் கேட்டுத் தம்பதிகள் ஓடி வந்தார்கள். இருவரும் கரங்களைக் கூப்பி மணிகண்டனை வணங்கி வரவேற்றுக் குடிலுக்குள் அழைத்துச் சென்றனர். உயர்ந்த ஆசனத்தில் உட்காரச் செய்து நல்ல அமுது சேவித்தார்கள். பின் அவனிடம் காட்டிற்கு வந்த காரணத்தை வினவ, அவனும் தனது தாயின் தலைவலி தீர புலிப்பால் கொண்டு வரக் காட்டிற்கு வந்ததாகச் சொன்னான். அவர்கள் அதைக் கேட்டுத் துடித்தனர். அவர்களுக்குக் கையும் காலும் ஓடவில்லை. பால் மணம் மாறாத பாலகனைக் காட்டிற்கனுப்பிய பெற்றோர்களின் கல்நெஞ்சத்தைப் பற்றிச் சிந்தித்தனர். பின் ஐயனுக்குக் களைப்பு நீங்கப் படுக்கை விரித்துக் கண்வளரச் செய்தனர்.

மணிகண்டன் அவர்களுக்குத் தரிசனம் கொடுத்து ஆட்கொள்ளக் கருதி, உந்தத் தம்பதிகளுக்குத் தேஜோ ரூபத்தோடு கூடிய மெய்ப்பொருளாய்த் திருத் தோற்றம் அளித்தார். தம்பதிகள் ஆனந்தம் கொண்டு சிரமீது கை உயர்த்தி ஐயனைச் சுற்றி வலம் வந்து கருணாமூர்த்தி யின் திருவிளையாடலை எண்ணி மனம் உருகினர்.

பூதநாதன் தம்பதிகளை வாழ்த்தி, "பக்தர்களே! இன்று எனக்கு அமுது அளித்துச் சேவித்த உங்களுக்கும் உங்கள் சந்ததியாருக்கும் சகல பாக்கியங்களும் ஏற்படும். நான் என்றுமே உன் உடமையாக இருப்பேன். உனக்கும் உங்கள் குலத்தோருக்கும் அடிமைச் சீட்டு தந்துள்ளேன். "கற்பங்குடி" என்ற உயர்ந்த ஸ்தானத்தையும் உங்களுக்கும் உங்கள் சந்ததியினருக்கும் அளிக்கிறேன். கலி யுகத்தில் உங்கள் வம்ச பாரம்பரியம் அனைவராலும் கௌரவிக்கப் படுவீர்கள்" என்று திரு அருள் புரிந்து மறைந்தார் இவ்வம்சத்தார் இன்றும் ஆண்டவனுக்குற்ற அடிமைகளாக இன்ப வாழ்வு வாழ்தல் கண்கூடு.

மன்னனும் மணிகண்டனும்

மணிகண்டனுக்குப் பணிவிடை செய்து அவன் அருள் பெறக் காத்துக் கொண்டிருந்த அமரர்கள், ஐயனின் கட்டளைப்படி அனைவரும் புலிகளாக மாற, இந்திரன் வேங்கையாக உருமாறி சுமக்கக் காத்து நின்றனன். மணிகண்டன் வேங்கையின்மீது ஆரோகணித்துப் புலிக் கூட்டம் பின் தொடரப் பந்தள நாட்டிற்குள் பிரவேசித்தான். நகர மக்கள் பயந்து, கூக்குரலிட்டு, அங்குமிங்கும் ஓடினர்.

இதையறிந்த பந்தள பூபதி ஓடி வந்து பார்த்தான். வேங்கையின்மேல் அமர்ந்து வரும் மனிகண்டன் ஆயிரம் கோடி சூரியப் பிரகாசத்துடன் தேஜோ மய ரூபமாய்க் காட்சி அளித்தான். இதை அறிந்த பூபதி தன்னிடம் இது வரை வளர்ந்த மணிகண்டன் ஒரு பரம்பொருளே என்றுணர்ந்தான்.

மணிகண்டன் வேங்கையை விட்டு எழுந்து அரசனை நோக்கி ஓடி வந்து வணங்கினான். அரசன் என்ன செய்வது என்று தெரியாமல் நாக்குழற, உள்ளம் விதிர் விதிர்க்க மணிகண்டனைப் பார்த்து, ''பம்பா நதி தீரத்திலே பெற்றெடுத்த பரம்பொருளே, அடிமையைக் காத்தருள் புரிய வேண்டும். தேவியின் தலைவலி நீங்கி விட்டது, இனி புலிப் பால் தேவையில்லை. தேவரீரை இன்னார் என்று அறியாமல் பிழை புரிந்து விட்டேன் என்னை மன்னித்து நற்கதி அடையத் திருவருள் புரிந்து எங்களை ஆட்கொள்ள வேண்டும்'' என்று விண்ணப்பித்தான்.

மணிகண்டன் அன்னையையும், அன்னைக்குத் தீய சிந்தனையைத் தூண்டிய அமைச்சரையும் மன்னித்து அருளினான். புலிக் கூட்டமும் மறைந்தது. அமரர்கள் மலர்மாரி பொழிந்தனர். இந்த அற்புதங்களையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த மக்கள், மணிகண்டன்

தெய்வத்தின் அவதாரம் என்று உணர்ந்து, ஆனந்தப் பெருக்கால் அவன் நாமத்தைத் துதித்து அவன் திருவடியே தஞ்சம் என்று பற்றி சரணடைந்தனர்.

அது சமயம் ஐயனின் ஆணைப்படி, சகலகலாவல்லவராகிய அகத்திய முனிவர் அவ்விடம் வந்தார். தமிழ் முனிவனுக்கு அரசன் உபசாரங்கள் செய்து, ஐயனின் உண்மையை எடுத்துக் கூறவேண்டும் என்று வேண்டினன். அகத்திய முனிவர் அரசனிடம் வீரமணிகண்டனின் திரு அவதார மகிமையை எடுத்து விளக்கமாகக் கூறினர். மகிஷியின் அழிவிற்காக, அரனும் அரியும் சேர்ந்து மணிகண்டன் உற்பவித்த விபரமும் சொன்னர்.

ஐயன் மணிகண்டனுக அவதரித்துத் தன்னிடம் பன்னிரண்டு ஆண்டு சேவகம் செய்துள்ளார் என்பதை அறிந்த அரசன், உடலும் உள்ளமும் உருக, ஹரிஹர புத்திரனைப் பணிந்து, நமஸ்கரித்து தனது பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்றும், ஞானதீபம் ஏற்றி அருள வேண்டும் என்றும் வேண்டினன்.

இத்தனை நாளும் அஞ்ஞான இருளில் அடைபட்டுக் கிடந்த இந்தக் குருடனுக்கு ஞான உபதேசம் செய்தருள வேண்டும் என்றும் பிரார்த்தித்தான். ஐயன் சொல்படி அரசன் பரமஞானியான அகத்திய முனிவரைக் குருவாகக் கொண்டு, முறைப்படி உபதேசம் பெற்றன் என்றலும் அவதார புருஷனை வீரமணிகண்டனிடம் ஞானேபதேசம் பெறவேண்டும் என்ற ஆசை அரசனை வாட்டியது. ஜகத் குருவான ஐயனும், இராஜசேகரனுக்கு ஞான மார்க்கத்தை உபதேசிக்க, திருவுள்ளம் கொண்டார்.

''கடவுளின் திருவடி அடையப் பல வழிகள் உண்டு. ஐம்புலன்களை அடக்கி ஒருமுகமாக இறைவனைத் தியானித்து அவரது திருவடியை அடையலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு வகைகளில் ஏதாவது ஒரு மார்க்கமாக முக்தி அடையலாம். மனத்தை ஒரு மனப்படுத்திப் பரம்பொருளைச் சிந்தையில் கொண்டு தியானத்தில் இருத்தல் வேண்டும்.

''பிரம்மத்திற்கு மாயையால் ரூபபேதம் உண்டாகிறது. ரூபம் மாறினலும் பிரம்மத்தின் தன்மை மட்டும்

ஒருபொழுதும் மாருது. பிரம்மம் நித்தியம்; மாயை அநித்யம். வைராக்கியத்தால் மாயையை அகற்றி, ஆணவ பலத்தை ஒழித்து, பிரம்மத்தில் மனதை ஈடு படுத்துதல் வேண்டும். ''பகவானே பிரம்மம். அவனே பிரபஞ்ச ரூபமான பரப் பிரும்மம். யாவும் அவனுள் அடக்கம்; மும்மூர்த்திகளும் அவனே. மும்மூர்த்திகளின் முக்குணங்களாகிய ஸ்தவம், ரஜஸ், தமஸ் என்பவை ஒவ் வொரு பிரபஞ்ச செய்கைகளுக்காக, மும்மூர்த்தியாக பாவித்தன.

பகவானுடைய பிரீதியை ஒன்பது வித உபாயங்களில் அடையலாம. ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், வந்தனம், பாத சேவனம், அர்ச்சனம், தாஸ்யம், சக்யம், ஆத்ம நிவேதனம். அதில் ச்ரவணத்தால் பரிக்ஷத் மகாராஜனும், கீர்த்தனத்தால் சுக ப்ரும்மமும், ஸ்மரணத்தால் கஜேந்திர ஆழ்வாரும், வந்தனத்தால் ப்ருதுராஜனும், பாத சேவனத் தால் மகாலக்ஷ்மி தேவியும், அர்ச்சனத்தால் அக்குரரும், தாஸ்யம், சக்யம் என்ற இரு உபாயங்களால் அர்ஜுனனும், ஆத்ம நிவேதனத்தால் மஹாபலியும் மஹோன்னத நிலையை அடைந்தார்கள். ஆகவே பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாம் என்பது பெரியோர் வாக்கு.

''பிரம்மத்தில் மனதைச் சேர்ப்பதற்கு ஆசானின் உபதேசம் அவசியம். அவ்வாசான் தெய்வ பக்தி, நற்குணம், பற்றற்ற மனப் பக்குவம், சிஷ்ய பந்தம் போன்ற குணங்களுடன், பாவக் கடலிலிருந்து கரை யேற்றும் மரக்கலம்போல் ஆற்றல் உடையவனுக இருக்க வேண்டும். கடவுளை நிர்க்குணனுக பூஜித்தாலும் சர்க்குண னுகத் தியானித்தாலும் அவரவர் மனோபாவப்படி தோன்றி அருள் செய்வார்.

''கலியுகத்தில் பரமனை அடையப் பக்தி மார்க்கம் ஒன்றே மிக எளிதானது. யார் எனக்கு பக்தியுடன் இலை, மலர், கனி, நீர் இவைகளில் ஏதாவதொன்றைச் சமர்ப்பிக் கின்ருரோ அதை நான் அன்புடன் ஏற்றுக் கொண்டு அருந்துகிறேன்'' என்பது கீதை வாக்கு—விருதுர்வார்த்த கஞ்சியை பகவான் அன்புடன் அருந்தினுர். குசேலர் கொண்டு வந்த அவலை அவர் வலியப் பிடுங்கி வாயில் போட்டுக் கொண்டார். சபரி கொடுத்த கனிகள் ராமனுக்குப்

பரம யோக்யமாயிருந்தன—கண்ணப்ப நாயனுரின் உமிழ் நீரும், மாமிசமும் முக் கண்ணனுக்கு சிறந்த நைவேத்திய மாயின-எல்லாம் பக்தியை அடிப்படையாகக் கொண்டவை. பற்றற்ற நிலையில் மனதை மட்டும் பகவானின் பாதங்களில் பற்ற வைத்து வழிபடுவது உத்தமம். ஏதேனும் ஆசை யோடு ஈடுபடுதல் மத்திமம்; கெட்ட சிந்தையோடும் கேவலமான உலக விஷயங்களுக்காகவும் ஈடுபடுதல் அதமம். அதம பக்தர்களையும் பகவான் சிக்ஷித்து மேன்மையான பக்தியை ஊட்டி, நல்வழியில் திருப்பி மோட்ச மார்க்கத்தைக் காட்டுகிருன்.

''உலக வாழ்வில் ஈடுபட்ட வண்ணம் இறைவனை வணங்கி அருள் பெறலாம். எவ் வருணத்தாரும் ஈசனைப் பூஜித்து மேன்மையடையலாம்.

பிரம்மசரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சன்னி யாசம் என நான்கு ஆசிரமத்தில் சிறந்ததும், பகவானைச் சுலபமாக அடைவதற்கு ஏற்றதும், இல்லறத்திலிருந்து மற்ரேரை ஆதரித்து இறைவனைப் பணிந்து இன்புறுவது மானிடர் பெறும் பாக்கியம்'' என்ற உயர்ந்த உண்மைப் பொருளை மன்னனுக்கு உபதேசித்தருளினுர். இதுவே ''பூதநாத கீதை'' என்ற பூதநாதனின் கீதோபதேச மாகும். பின் அரசனுக்குத் திவ்ய தரிசனம் அளித்தார் தர்மசாஸ்தா.



சபரிமலை ஆலயம்

அரசன் பக்தி என்னும் தேனைப் பருகி மனம் உருகினான். தான் பந்தள நாட்டில் ஒரு ஆலயம் அமைக்க ஆசையுடன் இருப்பதாகவும், அத் திருக்கோயில் எங்கே எவ்வாறு நிர்மாணித்தல் வேண்டும் என்பதையும் அறிவிக்க வேண்டும் என்று விண்ணப்பித்தான். ஸ்ரீ தர்ம சாஸ்தாவும் அரசனின் விருப்பப்படி கட்டும் ஆலயத்தில் தான் மனமுவந்து வசிப்பதாகவும், அந்த ஆலயம் தனது பக்தை யான சபரி முக்தியடைவதற்காகக் காத்திருக்கும் நீலமலை என்ற சபரிமலையில் கோவில் கட்டும்படியாகவும் ஆணை யிட்டனன்.

அந்த இடத்தை அடையாளம் காட்ட ஐயன் ஒரு அம்பை வீசினான். அது எந்த இடத்தில் கானகத்திலுள்ள ஒரு அரச மரத்தில் தைக்கிறதோ அவ்விடம் அம்பலம் அமைக்கும்படியும் சொன்னான். வீசிய அம்பு வெகுதூரம் சென்றது. நீலமலைக் காட்டை அடைந்து ஐயன் அருளியதுபோல் ஒரு அரச மரத்தில் குத்தி நின்றது.

ஐயனும் அரசனிடம் தான் இனி இங்கு வாசம் செய்ய இயலாது என்றும் தன் பிரிவால் வருந்த வேண்டாம் என்றும் கூறி, அரசனுக்கு ஒரு பேரொளிப்பிழம்பாகக் காட்சியளித்து, துன்பம் நேரும் சமயம் உபயோகிக்க ஒரு வாளையும் பரிசாக அளித்து அந்தர்த்தியானமானார்.

அதுசமயம் அகத்திய முனிவர் அவ்விடம் தோன்றி அரசனின் மனக் குழப்பத்தை நீக்கி, அரசனின் பூர்வ ஜன்மம், பம்பையாறு இவற்றைப் பற்றி விபரமாகச் சொல்லி, ஐயனைப் பூசை செய்யும் விதியையும் கூறி ஸ்ரீ தர்மசாஸ்தாவின் பிரதிஷ்டை சமயம் பரசுராமருடன் வருவதாகச் சொல்லிச் சென்றனர்.

சுபமுகூர்த்தத்தில் பந்தள பூபதி ஆலயத் திருப் பணியைத் தொடங்கினான். பல தேசத்துச் சிற்பிகளும், கட்டிடக் கலைஞர்களும், மன்னனும், மற்றோரும் காட்டிற்குப்

புறப்பட்டு வாபரனும் சிவ கணத்தவர்களும் தங்கி இருக்கும் எருமேலி என்ற இடத்தை அடைந்தனர்.

அரசன் வாபரன் உதவியால் ஞானக் கண் கொண்டு காந்தமலையில் ஸ்ரீ சாஸ்தா வீற்றிருக்கும் சிறப்பைக் கண்டு களித்தான். எருமேலியில் கோயில் பணிக்கு வேண்டியவற்றைச் சேகரம் செய்கையில் தனக்கு ஏதாவது துன்பம் வருமோ என்று எண்ணி பொருமை கொண்ட தேவேந்திரன் ராஜசேகரனுடன் சண்டைக்கு வந்தான். இறைவன் தந்த வாளை அரசன் தேவேந்திரன் மீது வீச அவன் அதிலிருந்து எங்கு ஓடியும் தப்ப முடியாமல் மணிகண்டப் பெருமானையே சரணம் அடைந்தான்.

மணிகண்டன், தன் பக்தர்களைத் துன்புறுத்தியவர்கள் பக்தர்களிடம்தான் சரண் அடையவேண்டும் என்ருர். உடனே தேவேந்திரன் பந்தள பூபதியிடம் தனது பிழையை ஒத்துக் கொண்டு சரண் அடைந்து அறிவு வரப் பெற்ருன். அரசன் கட்டும் ஆலயத்திற்குத் தெய்வ தச்சனுன விசுவகருமனை அனுப்புவதாகவும் சொல்லிச் சென்ருன்.

நல்ல முகூர்த்தத்தில் பணி தொடங்கியது. கை தேர்ந்த சிற்பக் கலைஞர்களும், கட்டிட நிபுணர்களும், தேவேந்திரன் அனுப்பிய விசுவகருமனுக்குத் துணையாக நின்று தேவாலயத் திருப்பணிக்கு உதவினர். வீர மணிகண்டனின் திருவருளால் மன்னனின் ஞானக் கண் களுக்கு மட்டும் அம்பு தைத்திருக்கும் அரசமரம் தெரிந்தது. பேரானந்தத்துடன் தன்னை மறந்து இவ்வாறு அருள் பெற்ற நிலையில் சரணம், சரணம் என்று போற்றினுன்.

பின் சபரி தவம் புரியுமிடத்தில் அவளுக்கும் ஐயன் ஆக்ஞைப்படி அம்பு தைத்த இடத்தில் சபரிமலை உச்சியில் ஒரு அழகான ஆலயத்தை எழுப்பினுன். வாபரனுக்கும் பூத கணங்களுக்கும் மாளிகை எழுப்பினுன். திருப் பணியின்போது சிலாஸ்தாபனம் அக்னி மூலையை நோக்கி அமைந்தது. அதைக் கண்ட மறையவர் பிற்காலத்தில் கோயிலுக்கு அக்னியால் சேதம் ஏற்படலாம் என்று சொல்ல மன்னன் மனம் கலங்கினுன். “தெய்வ சங்கல்பம் என்று ஒன்று இருக்கையில் நாம் கலங்க

வேண்டியது இல்லை'' என்று ஒரு அசரீரி எழுந்தது. இந்த வாக்கால் மன்னன் சித்தம் தெளிந்தான்.

திருப்பணி துரிதமாக நடந்தது. ஆலயத்தில் கிழக்குப் பக்கம் பதினெட்டுப் படிகளை அமைத்தனன். அவை பதினெண் தத்துவங்களைக் குறிக்கும். ஐந்து இந்திரியங்கள் — எட்டு சித்திகள் — மூன்று குணங்கள் — தவிர வித்தை - அவித்தை என்பனவாம்.

கர்ப்பக்கிருகம் அமைத்து மூலஸ்தானத்திற்கு வட புறத்தில் கணபதிக்கு ஒரு கோயிலும், பின்னால் நாகங்களுக்கு ஒரு புற்றும், மஞ்ச மாதாவுக்கு (மாளிகை புரத்தம்மன்) ஒரு அழகிய கோவிலும், பரிவார தேவதைகளான கருப்பசாமி, கடுத்தன், வாபரன் ஆகியோருக்கும் பீடங்கள் அமைத்துப் பணி செய்தான்.

எல்லாப் பணிகளும் முடிந்தபின் அரசனுக்கு பிம்பம் எப்படி அமைப்பது எனத் தெரியாது, மனத்தில் பெருஞ் சஞ்சலத்தைக் கொடுத்தது. இறைவன் அருள் கூர்ந்து கனவில் காட்சி அளித்து விக்ரகக் காட்சியை அளித்தான்.

ஸ்ரீ ஐயப்பனின் திருத்தோற்றம் யோக பட்டம் அணிந்த முட்டுக்களுடனும், எல்லாம் ஒன்று என்னும் சின்முத்திரையுடன் கூடிய வலத் திருக்கையும், இடது கால் முட்டில் ஆதரிக்கும் தன்மையுடன் நீட்டிய இடது திருக்கையும், ஒன்றாகப் பொருந்தி விளங்கும்படியான பங்கஜ மலர்ப் பாதங்களும் யோகாசனத்துடன் கூடிய தவ நிலையில் எழுந்தருளியிருக்கும் தேஜோ மயமான திவ்ய விக்ரகம் ஜோதி மயமாய் விளங்கிற்று.

மன்னன் உறங்காமல் ஐயனின் திரு நாமத்தை ஜபித்த வண்ணம் இருந்தான். பொழுது விடிந்தது. பரசுராமனை அழைத்துக் கொண்டு அகத்திய முனிவர் அவ்விடம் வந்தார். கலியுகத்தில் பதினெட்டு கோயில்களில் ஸ்ரீ ஐயப்பன் வசிப்பதாகவும், முக்கியமாக இந்த சபரிமலை ஆலயத்தில் இந்தச் சிலையை அமைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

மகரசங்கிரம புண்ணிய தினம் ஸ்திரவாரம், கிருஷ்ண பக்ஷம், பஞ்சமி திதி, உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபயோக

சுபதினத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க வேதங்கள் ஒலிக்க, அந்தணர் தோத்திரப் பாடல் பாட, அடியார்கள் இன்னிசைப் பாடல்கள் பாட, பந்தள பூபதி இராஜ சேகரனால் இறைவனின் திருவருளோடு, பரசுராமன், அகத்தியர் முதலான மாமுனிவர்கள் முன்னிலையில் ஸ்ரீ ஐயப்பனின் ஜோதிமயமான விக்ரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். கின்னரர், கிம்புருடர், நாரதர் முதலியோரும் ஹரிஹர சுதனின் திருநாமத்தைத் தோத்திரம் செய்து மகிழ்ந்தனர். பந்தள பூபதி கோலாகலமாகக் கோயில் திருப்பணியை முடித்தான்.

தர்ம சாஸ்தாவாய், மெய்யப்பனாய் பதினெட்டாம்படி கோயிலுள் தாரக பிரம்மமாய் மண்ணையும் விண்ணையும் காக்க எழுந்தருளினார். முழுமுதற் பரம்பொருள் விக்ரகத்தில் சாந்நித்யமானான். அன்று முதல் தொடர்ந்து ஆலய வழிபாடுகள் நடந்து வருகின்றன. சபரிமலையில் ஐயனின் திருநாமம் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

சில நாட்கள் மன்னன் அங்குத் தங்கியிருந்து பின் பம்பா நதிக் கரையில் தவம் புரிந்து ஸ்ரீ தர்மசாஸ்தாவின் அருளால் சாயுஜ்ய பதவியை அடைந்தான்.

ஸ்ரீ ஐயப்பன்—ஹரிஹரபுத்திரன் கலியுக வரதனாய்க் கண்கண்ட தெய்வமாய் கருணையின் உருவாய்—கேட்ட வரம் தரும் தர்மசாஸ்தாவாய்—தர்ம சொருபமாய்—செல்வம் தரும் மோகினி சுதனாய் எழுந்தருளியிருக்கும் ஐயனின் தாமரைத் திருவடியே சரணம் என்று போற்றிப் பணிவோமாக. பதினெட்டுப் புராணங்களுள் பிரம்மாண்ட புராணத்தில் ஸ்ரீ பூத நாதோபாக்கியானம் என்னும் கலியுக வரதனான ஹரிஹர புத்திரனின் அவதார மகிமையைப் படித்தாலும், படிக்கக் கேட்டாலும் அனைத்துப் பாவங்களும் போய்விடும். நீண்ட ஆயுளோடு தனம், தான்யம், பசு, புத்திர லாபங்களோடும் சம்பத்து பெருக வாழ்வார்கள். எந்தக் குறையுமின்றி குளிர நீடு வாழ்வார்கள்.

அஷ்டமத்து சனியோ, ஜன்மச் சனியோ, ஜன்மம் அல்லது மூன்ருவது இடத்தில் குரு இருந்து துன்பம் ஏற்பட்டாலும் ஐயப்பனை வணங்கினவர்க்குத் துன்பங்கள் நீங்கும் என்பர் பெரியோர். சுவாமியே சரணம் ஐயப்பா!

தை விளக்கு

41 நாட்கள் நோன்பு கொண்டு சபரிமலை செல்லும் பக்தர்கள் தை விளக்கைப் பாராமல் வருவதில் பிரயோஜனமில்லை என்பது முன்னோர் வாக்கு. கலியுக வரதனான தர்ம சாஸ்தாவிற்குப் பூரணை, புஷ்கரணை என்ற இரு தேவிமாரும் ஸத்யகன் என்ற புத்ரனும் உள்ளனர். அவர் வெள்ளை யானைமீது ஆரோகணித்து, கையில் செண்டு எனும் ஆயுதம் தரித்து இருப்பதாக ஐதீகம்.

ஆனால், சபரிமலையில் அவர் பிரம்மசாரியாகப் பாலயோகியின் உருவத்தில் காட்சி தந்தருள் செய்கிருர். மார்கழி 30ந்தேதி மகரவிளக்குப் பெருநாள். அன்றுதான் ஐயன் பிறந்த தினம். ஆகவே தை விளக்கு முக்கியத்துவம் ஆகும். அன்று தீபாராதனை சமயத்தில் தேவர்களும் முனிவர்களும் ஆராதனை செய்கிருர்களாம். அன்று அதே வேளையில் வடகிழக்கான பொன்னம்பலமேட்டில் சரணம் சொல்லி வணங்கும் பக்தர்களுக்கு ஒரு திவ்ய ஜோதி தெரிகிறது. இந்த ஜோதி சொரூபம் தர்ம சாஸ்தாவின் பிரம்ம சைதன்யம் என்று வழிபட்டு வருகின்றனர்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்தருளும் ஸ்ரீ ஐயப்பனின் திவ்ய பாதங்களுக்குச் சரணம்!

சுவாமியே சரணம் ஐயப்பா!

சபரிமலை யாத்திரை

சபரிமலைப் பெருமானைக் காண ஆர்வங்கொண்டு செல்லும் பக்தர்கள் பல நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முதல் தடவையாக சபரிமலைக்குச் செல்லும் ஐயப்ப பக்தனுக்கு "கன்னி ஐயப்பன்" என்று பெயர்—நல்ல நாளில் சனிக்கிழமை அல்லது உத்திர நக்ஷத்திரத்தில் பெரிய ஐயப்பன் (பலதடவை கோயிலுக்குச் சென்றவர்) அணுகிப் பணிந்து அவரது ஆசியோடு ருத்திராட்ச மாலையோ அல்லது துளசி மாலையோ அணியவேண்டும். பின் ஒரு மண்டலம் அதாவது நாற்பத்தொரு நாள் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அந்தக் காலத்தில் பக்தர்கள் பிரம்மசரியத்தை அனுஷ்டிக்க வேண்டும். எப்பொழுதும் "ஐயப்பா சரணம்—சுவாமியே சரணம்" என்று மனம் உருகி சொல்லி வணங்க வேண்டும். சத்வ உணவு கொள்ள வேண்டும். பிறருடன் பேசும்போதும், பழகும்போதும் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். 'இரை' மீது வைக்கும் ஆசையை 'இறை'யின் மீது வைத்து சதா பேச்சிலும் சிந்தையிலும் ஐயப்பன் திருநாமம் மட்டும்தான் இருக்கவேண்டும் கூடுமானவரை சாயம் நனைத்த கருப்பு, பச்சை, நீலத் துணிகளையே உடுத்தல் வேண்டும். நாம ஜபம், தேவ பூஜை, பஜனை, அன்னதானம், கதாசிரவணம் இவைகளில் பங்கெடுக்க வேண்டும். ஐயப்ப பூஜை நடத்துகின்ற வழிபாட்டினை "வெள்ளங்குடி" என்று சொல்லுவது சம்பிரதாயம் சாஸ்தா பூஜை, அன்னதானம் செய்து புறப்படுவார்கள். குரு சொல்படி "இரு முடி" கட்டுக்கு தேவையான சாமான்களை இரண்டு அறை கொண்ட நீளமான பை ஒன்று செய்து அதில் பூஜை சாமான்கள், கற்பூரம், அபிஷேக நைவேத்ய சாமான்கள், காணிக்கைப் பணம் இவைகளை முன்கட்டிலும், யாத்ரா காலத்திற்குத் தேவையான உணவுப் பண்டங்களைப் பின்கட்டிலும் வைத்துக் கட்டிக் கொண்டு அப்பையைத் தலையில் எடுத்துச் செல்ல வேண்டும். இதுதான் "இருமுடி" எனப்படும். நைவேத்யத்திற்குப் பசுவின் நெய்யை உருக்கி ஒரு தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரை எடுத்துவிட்டு அதற்குள்

காய்ச்சிய நெய்யை நிரப்பிக் கார்க்கினால் இறுக மூட வேண்டும். பாயோ கம்பளியோ எடுத்துக்கொள்ளலாம்— இருமுடி சுமந்து வீட்டை விட்டுப் புறப்படும்போது எவரிடமும் விடை பெறுவதுமில்லை. திரும்பிக்கூடப் பார்ப்பதுமில்லை.

கோட்டயத்திற்குப் பதினெட்டு மைல் தூரத்திலுள்ள பந்தள ராஜாவின் அரண்மனையில் சுவாமியின் திரு ஆபரணங்களைக் காணலாம். சபரிமலை செல்கின்ற பக்தர்கள் பந்தள ராஜாவிடம் பிரசாதமும் மலையேற அனுமதியும் பெறுவர்.

சபரிமலைப் பிரயாணம் தற்போது அவ்வளவு கடினமானதல்ல—காடுகள் நிறைந்திருந்தும், பாதைகள் ஒருவாறு அமைந்துள்ளது. காட்டு விலங்குகளின் தொந்தரவும் அவ்வளவாக இல்லை.

பந்தளம் செல்லாமல் கோட்டயத்திலிருந்து எருமேலி சென்று அங்கிருந்து சபரிமலை செல்லலாம். எருமேலியிலிருந்து 40 மைலுக்கு மேல் கால் நடையாக நடந்து பம்பையாற்றைக் கடந்து நீலமேடு சபரிமலை அடையலாம். எருமேலி ஒரு புராதனமான வழி. கன்னி ஐயப்பன்மார்கள் எருமேலி பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். சிலர் தேனி, கம்பம் வழியாகச் சென்று வண்டிப் பெரியாறு, சாலக்காயம், சத்திரம் வழியாகவும் போகலாம். இவ்வழியே சென்றால் 12 மைல்தான் நடந்து செல்ல வேண்டிவரும்.

சபரிமலைக்குச் செல்லும் காட்டில் ஏழு கோட்டைகள் இருக்கின்றன. சபரிமலையின் ஆரம்பத் தலமாகிய எருமேலி[1] யிலிருந்துதான் பயங்கரமான காடு ஆரம்பமாகிறது. ஐயப்பனின் பிரதான பூதசாமியாகிய வாபரன் கோவில் இங்கு இருப்பதால் தேங்காய் உடைத்துப் பொரி தூவி வணங்க வேண்டும். இங்குக் கன்னி ஐயப்பன்மார்கள் வேடன்போல் வேடம் பூண்டு சாஸ்தாவைப் பணிந்து "சுவாமி திந்தக்க தோம்"—"அய்யப்ப திந்தக்கதோம்" என்று பாடி ஆடுவர். பின் பக்தர்கள் தற்காப்பிற்காகக் கையில் கதையும் அம்பும் ஏந்திக் காட்டில் பிரவேசிக்க வேண்டும். காளைகட்டி[2] என்னும் இடத்தில் இறைவனை வழிபட்டு அலஸா ஆற்றில் நீராடி ஒரு கல்லினை எடுத்துக் கல்லிடுங் குன்றில் போட்டு வணங்க வேண்டும். அங்கிருந்து புறப்பட்டு உடும்

பாறையை[3] அடைந்து பூதகணங்களுக்குப் பூசை செய்து கரிமலையை[4] அடைய வேண்டும். இங்குக் கிணற்றிலும் குளத்திலும் பொரி தூவிச் சற்று தூரம் சென்ருல் பம்பா நதி[5]. அதில் நீராடி மேற்சென்ருல் சபரி வாழும் நீலமலையை அடையலாம். சபரியைத் தியானித்து சரங்குத்தி[6] என்னும் அரச மரத்தை அடைந்து அம்பு, கதைகளைப் போட்டு விட்டு அங்கிருந்து கோவில் சிகரங்களைப் பார்க்கலாம்.

திருக்கோவிலை அடைந்து பதினெட்டுப் படிகளையும் கடந்து ஐயப்பனைப் பணிதல் வேண்டும். பதினெட்டுப் படிகள்[7] ஏறும்போது தேங்காய் உடைத்துப் படியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டுபடி ஏற வேண்டும். மாளிகைபுரத்தம்மன் கோவில் கதவுகளைத் திறப்பதே கிடை யாது. இங்கு தேங்காயை உடைக்காமல் உருட்டிவிட வேண்டும். அங்குள்ள பஸ்மக் குளம், கும்ப குளக் கால்வாய் முதலியவற்றில் நீராட வேண்டும். படியில் வலது பக்கத்தில் கருப்புசாமியும், இடது பக்கத்தில் கடுத்தசாமியும் இருக்கின்றனர். கன்னி மூலையில் கணபதியும் வாயு கோணத்தில் மாளிகைபுரத்து அம்மனும் வடக்குப்புரத்தில் வாபர சுவாமியும் பரிவாரங்களாய் ஸ்ரீ தர்ம சாஸ்தா மூலஸ்தானத்தில் அமைத்திருக்கின்றனர்.

இவர்களை வணங்கி பெரிய அம்பலத்தை வலம் வந்து மேற்கு நடைவாயில் வழியாகக் கீழே இறங்கி வருதல் வேண்டும். பிறகு நெய்த் தேங்காய் உடைத்து அபிஷேக ஆராதனைகளைச் செய்து ஐயப்பனை வணங்கி வழிபடு கிருர்கள்.

சபரிமலை ஐயப்பன் கோயில்
திறக்கப்படும் நாட்கள்

எல்லா மலையாள மாதம் 1ம் தேதி முதல் 5ம் தேதி வரை—ஆவணி திருவோணம்—கார்த்திகை 1ம் தேதி முதல் 41 நாள் (மண்டலபூஜை)—மார்கழி 25உ முதல் 12 நாள் மகரவிளக்கு—பங்குனி உத்திரம்—சித்திரை விஷு— வைகாசி ஹஸ்தம்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

———o———

தத்துவங்கள்

ஸ்ரீ தர்மசாஸ்தா என்ற ஐயப்பன் சைவம், வைஷ்ணவத்துடன் சக்தியின் சைதன்யமும் கலந்துள்ளது. இந்த சாஸ்தா வெகு காலத்திற்கு முன்பே வழிபட்டு வந்ததாகவும் பின் வேதமதம், திராவிட மதம் இவைகள் இணைந்த காலத்தில் இவரை சாஸ்தா என்றும், ஐயனர் என்றும் பல சரணம் சொல்லி வழிபட்டு வந்திருக்கிருர்கள்.

இவர் அமர்ந்துள்ள திருக்கோலமே ஒரு யோகாசன முறை. இரண்டு குதிகால்களின் மீது உடலின் அடிப்பாகத்தை அமுத்தி, உட்பாரம் வயிற்றுடன் குதிகால்களில் தூக்க, முன்புறம் சாந்தநிலை—இந்நிலையில் உடல் வில்போல் ஆகும் தன்மையுடையது. இந்த யோகாசன முறை மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை சுலபத்தில் மேல்நோக்கி எழும்ப உதவும் என்று சொல்லுகிருர்கள். சோளிங்கபுரத்து யோக நரசிம்மமும், யோக ஆஞ்சனேயரும் ஐயப்பன் போலவே யோகாசன முறையில் அமர்ந்து காணப்படுகின்றனர்.

ஐயப்பனின் வலக்கை சின்முத்திரையைக் காட்டிக் கொண்டு இருக்கிறது. இதை ''அறிவடையாளம்'' என்பர். பெருவிரலும் சுட்டுவிரலும் சேதுஸ்து ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தைக் காட்டுகிறது. ''மற்ருெரு கை ''இந்த தவத்திரு கோலத்தில் இருக்கின்றேன். அந்த நிலை அடைய என் பாதாரவிந்தத்தை நாடுங்கள்'' என்று தன் இடது கையால் தன் திருப்பாதங்களை ஐயப்பன் சுட்டிக் காட்டு கிருர். ஐயப்பன் கால்களை இணைக்கும் பட்டை சிவ, விஷ்ணு ஐக்கியத்தை காட்டுகிறது. சாஸ்தாவின் ஆயுதம் செண்டு. இந்த நிலைமையில் இவரை ''சாமியே சரணம் ஐயப்பா'' என்று சரணம் சொல்லி பக்தர்கள் வழிபடுகிருர்கள்.

சிவபெருமான் 96 தத்துவங்கள் கடந்த மூர்த்தி. முருகப்பெருமான் 36 தத்துவங்கள் கடந்தவர். அரிகரபுத்திரன்,

மணிகண்டன், தர்மசாஸ்தா என்று எல்லாம் பெயர் பெற்ற ஐயப்பன் 18 தத்துவங்கள் கடந்தவர். அவையாவன :

(1) மெய், (2) வாய், (3) கண், (4) மூக்கு, (5) செவி, (6) முதல் 13 வரை அஷ்டமாசித்திகள். (14) சத்வம், (15) ரஜஸ், (16) தம்சம், (17) ஞானம், (18) அஞ்ஞானம்— ஆக இவை இறைவனான ஐயப்பனுக்கு 18 படிகள்.

இந்த மங்களகரமான எண் ஜயத்தை அளிப்பதாகும். இந்த 18 என்ற எண்ணை உலகெல்லாம் பயன்படுத்தி இருக்கின்றனர். அவற்றில் சில.

1. வியாசர் எழுதிய புராணங்கள் :

(1) மத்ஸ்யம், (2) கூர்மம், (3) வராகம், (4) வாமனம், (5) வைணவர், (6) பிரமம், (7) பாகவம், (8) சைவம், (9) இலங்கம், (10) பௌடிகம், (11) நாரதீபம், (12) காருடம், (13) பிரம கைவர்தம், (14) ஸ்காந்தம், (15) மார்க்கண்டேயம், (16) ஆக்கிஞேயம், (17) பிரயாண்டம் (18) பதுமம் என்பன 18.

2. உபபுராணங்கள் :

ஸரத்குமாரம் – நாரஸிம்மம் — ஸ்காந்தம் சிவதர்மம் — நந்தி — தூர்வாஸ் – நாரத —காபில – மாநவ ஔசநஸ – பிரும்மாண்ட — லாருண – காளி — மஹெச்வர — ஸாம்ப — ஸௌர—பாராசர்ய மாரீசி ஆக 18.

3. வித்தைகள்

வேதங்கள் நான்கு—ரிக், யஜுர், சாமம், அதர்வ வேதம்.
அங்கங்கள் ஆறு – சீக்ஷா — வ்யாகரணம் — சந்தஸ் — நிருத்தம்—ஜொதிஷம்—கல்பம்.
உப அங்கங்கள் நான்கு — பிமாம்ஸை — நியாயம் — தர்மசாஸ்திரம் – புராணம்.
தவிர, ஆயூர்வேதம்—கந்தர்வவேதம்—தனுர்வேதம்— அர்த்தசாஸ்திரம் ஆக 18.

4. சித்திகள் பதினெட்டு அவை :

(1) அணிமா (2) லிகிமா (3) மஹிமா (4) ஈசத்தவம் (5) வசித்வம் (6) பராகாமயம் (7) புத்தி (8) இச்சா (9) ப்ராப்தி (10) ஸர்வ காமம் (11) சர்வ சம்பத்ப்ரதம் (12) ஸர்வ பிரய மகரம் (13) ஸர்வ மங்கள காரணம் (14) ஸர்வ துக்க விமோசனம் (15) ஸர்வம் ருத்யு ப்ரஸமனம் (16) ஸர்வ விக்ன நிவாரணம் (17) ஸர்வாங்க சுந்தரம் (18) ஸர்வ சௌபாக்ய தாயனம்.

5.	பகவத் கீதையின் அத்தியாயம்	18
6.	மஹா பாரதம் பர்வங்கள்	18
7.	பாரதப் போரில் கலந்த அக்ஷோஹிணி	18
8.	பாரதப் போர் நடந்த நாட்கள்	18
9.	பிரிசித்தமான ஸ்மிருதிகள்	18
10.	,, பாஷைகள்	18
11.	,, ஜாதிகள்	18
12.	,, வாத்தியங்கள்	18
13.	ஸ்ரீசங்கரர் பாஷ்ய மெழுத சூத ஸம்ஹிதையை படித்த முறை	18
14.	ஸ்ரீராமாநுஜர் அஷ்டாத்திரி பெற குருவை யடுத்த முறை	18
15.	யாகத்தில் ரித்விக்குகள் — 16, யதுமானர்—பத் நீர்—ஆக	18
16.	சண்டிகாதேவி (காளியின்) கரங்கள்	18
17.	சபரிமலை சாஸ்தா ஆலயப்படி சரணமடைவது	18
18.	ஸ்ரீதர்ம சாஸ்தா சபரிமலை அய்யப்பன்	18

புஸ்தகத்தின் தலைப்பு எழுத்து பதினெட்டு !

சுவாமியே சரணம் ஐயப்பா !!

——o——

தர்ம சாஸ்தா திருக்கல்யாணம்

(கர்ண பரம்பரைக் கதை)

இந்தியாவின் வட எல்லையில் இமயமலைச் சாரலில் நேபாள தேசம் இருக்கிறது. அதை அரசாண்ட பூபாலன் மந்திர தந்திரங்களில் தேர்ந்தவன். காளியின் அருள் பெற்று சந்தோஷமாய் வாழ்ந்து வந்தான். பின் அவனுக்கு வயதாகி மூப்பு வரத் தொடங்கியது. காளிக்கு ஒரு கன்னியை அர்ப்பணித்தால் மூப்பின்றி வாழலாம் என்று சிலர் சொன்ன யோசனையின் பேரில் ஒரு கன்னியைக் கொண்டு வந்தான். சிவ பக்தியுள்ள இந்தக் கன்னி சிவபெருமானை வேண்ட சாஸ்தா அவனைக் காக்க விரைந்து வந்தார். சாஸ்தா மன்னனுக்குப் புத்தி மதி சொல்ல, அரசன் தன் தவற்றை உணர்ந்தான். ஐயன் திருவடியில் விழுந்து துதித்துப் போற்றினான். சிவபக்தி யுள்ள கன்னியும் விடுதலை பெற்று மகிழ்ந்தாள். பின் அரசன் தனக்குப் புஷ்கலை என்ற மகள் இருக்கிறாள்; அழகு, அறிவு, தயை பொறுமை எல்லாம் நிறைந்தவள். அவள் கரம் பற்றித் தன் மருமகனாகி, தன்னைக் காத்தருள வேண்டும் என்று வேண்டினன். அய்யனும் சம்மதித்து அரசர்க்குரிய முறைப்படி திருமணம் நடந்தது. புஷ்கலையை மனைவியாக ஏற்றுக் கொண்டார்.

காஞ்சிமா நகரில் சிவபாலன் என்ற அரசன் நீதி தவறாது அரசாண்டு வந்தான். ஒரு நாள் வேந்தன் வேட்டையாடக் காடு சென்றான். வெகு நேரம் ஆகி விட்டது. இரவு வந்தது. திசை தெரியாமல் அரசன் காட்டின் நடுப்பகுதி சென்று விட்டான் நல்ல இருள். ஒரே சப்தம். கோரமான பூதகணங்களின் கூட்டம் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. மன்னன் கதி கலங்கினான். இவை தர்ம சாஸ்தாவின் பரிவாரங்கள் என்று அறிந்து அரசன் "ஐயனே சரணம்! சுவாமியே சரணம்! மோகினி சுதனே சரணம்!'' என்று ஓலமிட. ஐயனே அவன் முன் தோன்றினான். ஐயனைக் கண்ட பூதகணங்கள் ஐயனை வணங்கி மறைந்தன. பின் அரசன் எல்லா நற்குணங் களும் பொருந்திய தனது புத்திரி பூர்ணையை சாஸ்தாவின் திருக்கரத்தில் அர்ப்பணித்து அவனை ஏற்றுக் கொள்ளும்படி

வேண்ட தர்மசாஸ்தாவும் திருமணம் செய்து கொண்டு அவளுடன் மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்.

ஐயன் பூர்ண புஷ்கலா என்ற இரு சக்திகளோடு அவரவர் வழிபாட்டிற்கு மகிழ்ந்து காக்கும் தெய்வமாக விளங்கிவருவது தெரிகிறது.

சங்கர சம்ஹிதையில் உள்ள உபதேச காண்டத்தில் பூர்ண, புஷ்கலா இருவரும் ஸத்ய பூர்ணர் என்ற மகா ரிஷியின் கண்களிலிருந்து தோன்றியவர்கள் என்று கூறப் பட்டு இருக்கிறது. இவர்கள் ‘கல்யாணம்’ என்ற விரதம் இருந்து அதன் காரணமாக மகாசாஸ்தாவை மணந்து கொள்ளும் பேறு பெற்றனர்—முன் விஷ்ணுவின் கண்களி லிருந்து பிறந்த அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்ற இருவரும் முருக பெருமானை கணவனாக அடைய தவம் செய்து, வேடனிடத்திலும் இந்திரனிடத்திலும் வளர்ந்து முருக பெருமானை மணந்தனர். அதுபோல இவர்களும் நேபாள மன்னனிடமும் காஞ்சி மன்னனிடமும் வளர்ந்து மகா சாஸ்தாவை திருமணம் செய்து கொண்டார்கள்.

அபூர்வ சாஸ்தா

16வது நூற்ருண்டில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். அது சமயம் நரஸிம்ம பூபாலன் என்ற சோழ மன்னன் அரசாண்டு வந்தான். ஒரு நாள் அரசன் பண்டிதருடன் ஒரு சாஸ்தா கோயிலுக்குச் சென்ருன். அங்கு தர்ம சாஸ்தா மூக்கில் விரலை வைத்த கோலத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். இதற்குச் சரியான காரணம் அமையும்படி பண்டிதர்கள் கவிபாடினுல் சாஸ்தாவின் சிலை தன் மூக்கிலிருக்கும் விரலை எடுத்து விடும் என்ற கர்ணபரம்பரைக் கதையை அவ்விடமுள்ளவர்கள் அரசனிடம் சொன்ஞர்கள். பலர் கவிபாடியும் சாஸ்தா மூக்கிலிருந்து விரலை எடுக்கவில்லை. நரசிம்ம பூபாலன் அவ்விடமிருக்கும் மகாபண்டிதராகிய அப்பய்ய தீக்ஷிதரைக் கவிபாடும்படி வேண்டினன். மகாவித்துவான் யோசித்தார். சாஸ்தா சிந்தனையில் ஆழ்ந்திருந்தால் கன்னத்தில் கையை வைத்திருப்பார். ஆகவே சிந்தனை செய்யவில்லை. ஆச்சரியப்படுபவர்தான் மூக்கில் கையை வைப்பார்கள் என்று நினைத்து அழகிய கவி அவர் வாக்கினின்றும் வெளி வந்தது.

" அம்பேதி கௌரீ மஹமாஹ் வயாமி
பத்ந்ய : பிதுர் மாதா ஏவஸர்வா :
கதன்னு லக்ஷ்மி மிதி சிந்த யந்தம்
சாஸ்தார மீடே ஸகலார்த்த ஸித்யை :

சிவபிரான் தந்தை. ஆகவே கௌரீ (பார்வதி)யை அம்மா என்று அழைப்பேன். விஷ்ணு மோகினியாய் இருந்த சமயம் நாம் சிவனுக்குப் பிறந்தோம். ஆகையால் விஷ்ணுவை அம்மா என்று அழைத்தார். தவறில்லை. ஆனுல் மகாலக்ஷ்மி அம்மாவான விஷ்ணுவுக்கு மனைவி. நாம் இது வரை தந்தைக்குத்தான் மனைவியைக் கண்டிருக் கிரேம். அம்மாவிற்கு மனைவி ஏற்பட்டு இருக்கிறது. அதிசயம்! இது வியப்பான உறவு முறையாக இருக்கிறது. இது ஒரு ஆச்சரியம்! என்ற அர்த்தத்துடன் கவிபாட

சாஸ்தா (சிலை) மூக்கிலிருந்து விரலை எடுத்து விட்டார். அரசனும் மற்றவர்களும் கவிதையின் கருத்தையும் சாஸ்தா மூக்கிலிருந்து விரல் எடுத்ததையும் கண்டு பரவசமெய்தினர். (இவ்வரலாறு தீக்ஷிதேந்தர விஜயம் என்ற புஸ்தகத்தில் இருக்கிறது.)

சாஸ்தாப்ரீதி

இறைவனைப் பல முறைகளில் வழிபடலாம். ஆகம விதிப்படியான ஆராதனை, அலங்காரம், அபிடேகம், அர்ச்சனை முதலியவைகளில் மோன நிலையில் ஆழ்ந்த பேரின்பத்தில் திளைக்க முடிகிறது. பாமர ஜனங்கள் வழிபடும் வெறியாடலாகிய ஆவேசத்திலும் அந்த ஆனந்தத்தை அடைவது சாத்தியம். எப்படி வழிபட்டாலும் வழிபடுவோரின் மனநிலையை துரியானுபவத்திற்கே கொண்டு சேர்க்கிறது. சாஸ்தாப்ரீதியில் கோமரத்தாடிகளுடன் பக்த கோடிகள் தம்மை மறந்த நிலையில் பிரார்த்தனை செலுத்துகிறார்கள்.

சாஸ்தாப்ரீதி பங்குனி உத்திரம் அல்லது ஏதாவது ஒரு சனிக்கிழமையில் நடத்துவது வழக்கம். காலையில் தர்ம சாஸ்தாவுக்கு அபிடேகம், அலங்காரம் ஆராதனை அர்ச்சனை முதலியவைகள் நடைபெறும். அன்று பகலில் அன்னதானமும் வழிபாடும் கோலாகலமாக நடக்கும். சந்நிதியில் அழகான பல குத்து விளக்குகள் சுடர் விட்டு எரிவது கண் கொள்ளாக் காட்சி.

சாஸ்தா, செல்லப்பிள்ளை சங்கிலி பூதத்தான், யட்சி இவர்களின் பிரதிநிதிகளாய் நான்கு கோமரத்தாடிகள் சந்நிதியில் தொழுது நிற்பார்கள். இவர்கள் எதிரில் கட்டுக் கட்டாய்க் கற்பூரம் கொழுந்து விட்டு எரியும். அதன் சுவாலையும் (குங்கிலியம்) சாம்பிராணியின் (தூபம்) மணமும், மேளதாளங்களும் பக்தர் சூழ்ந்து இருப்பதும், ஆவேசத்தைத் தூண்டி வளர்க்கும். இந்தச் சூழ்நிலையில் கோமரங்கள் சாஸ்தாவின் அருள் கொண்டு பரவசமாய் ஆடுவார்கள், கூவுவார்கள். தர்ம சாஸ்தா பரிவாரத்துடன் இவர்கள் மீது ஆரோகணித்து விட்டார் என்பது ஐதீகம். பின் குளத்துக்கோ அல்லது ஆற்றுக்கோ கோமரங்களை அழைத்துச் செல்வார்கள். நீராடி முடிந்து இவர்கள் இளநீர், சந்தனம் முதலியவைகளை அருந்துவர். பின் கோயிலுக்கு அழைத்துச் சென்றபின் அவ்விடம்

நடைபெறும் ஆராதனையில் சந்நிதியில் அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்குவர். கோமரம் தெய்வ ஆவேசம் நீங்கியவராய் எழுந்திருப்பார். பிரசாதம் வழங்கப் பெற்று வழிபாடு பூர்த்தி ஆகும்.

சாஸ்தாப்ரீதியில் பக்த கோடிகள், கோமரத்தாடிகளுடன் தம்மை மறந்து பிரார்த்தனை செலுத்துவதை இன்றும் பார்க்கலாம்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

———o———

இதர ஆலயங்கள்

இப்படிச் சபரிமலையில் வழிபட்டு வரும் ஐயப்பன் என்ற தர்மசாஸ்தாவைத் தமிழ் நாட்டில் பல இடங்களில் பல பெயரில் வழிபட்டு வருகிறார்கள்.

கைவிளாஞ்சேரி : சீர்காழி தென் பாதித் தெருவில் சாஸ்தாவின் கோயில் இருக்கிறது. கோயில் சிறியது, அசமுகி என்ற அரக்கி இந்திராணியின் கையை பிடித்த சமயம் வீரமகாகாளர் அசமுகியின் கையை வெட்டி இந்திராணியைக் காத்த இடம். இந்திராணியைக் கைவிடாமல் சாஸ்தா காப்பாற்றிய இடமாதலால் "கைவிடான்சேரி" என்றிருந்து இப்பொழுது "கைவிளாஞ்சேரி" என்று மருவி இருக்கலாம்.

மாயூரத்தின் பக்கத்திலே ஆனந்தத் தாண்டவபுரம் என்ற ஊரிலுள்ள ஐயனின் பெயர் திருவரசமூர்த்தி. தேவியை 'சொக்காயி' என்று வழிபட்டு வருகின்றனர். வரமளிக்கும் மங்களமூர்த்தி ஒரு சமயம் சாஸ்தா தனது மனைவியுடன் பந்தாடிக் கொண்டு மாயூரத்தின் சமிபத்தில் ஆனந்தத் தாண்டவபுரம் என்ற ஊர்வரை வந்தார். இரவு முடிந்தது. விடியுமுன் சபரிமலை செல்ல வேண்டும். இல்லையேல் எங்கு சூரியன் உதயம் ஆகிறதோ அவ்விடம் தங்கவேண்டும் என்பது ஐயன் பிரதிக்ஞை. சூரிய உதயம் ஆனதால் இவ்விடம் தங்கித் தன் ஒப்பற்ற சான்னித்தியத்தை நிலவச் செய்தார். அது போலக் கொள்ளிடக் கரையிலுள்ள "மெய்யாற்றூர்" என்ற ஊரில் வடுகநாதர் என்ற சித்தரின் அன்புக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டு அவ்விடம் தங்கித் தன் சான்னித்தியத்தை நிலவச் செய்தார்.

காவிரிப்பூம்பட்டிணத்தில் இந்த சாஸ்தாவுக்குத் திருக்கோயில் இருக்கிறது. "பீடாபஹாரி" என்று அழைக்கும் இந்த மகாகாளமூர்த்திக்கு சமீபத்தில் மகாகும்பாபிஷேகம் நடந்தது.

சேக்கிழாரின் பெரியபுராணத்தில் ஐயனுரைப் பற்றிய பாடல் :

''சேரர் காவலர் விண்ணப்பஞ்
செய்தவத் திருவுலாப் புறமன்று
சாரல் வெள்ளியங்கலையிற்
கேட்ட மாசாத்தனுர் தரித்திந்தப்
பாரில் வேதியர் ''திருப்பிடவூர்'' தனில்
வெளிப்பட பகர்ந்தெங்கும்
நாரவேலை சூழுலகினில்
விளங்கிட நாட்டினர் நலத்தாலே''

(வெள்ளானைச் சருக்கம்)

'திருப்பிடவூர்' என்பது இப்பொழுது ''திருப்பதட்டூர்'' என்று வழங்குகின்றது. இது திருச்சிராப்பள்ளியிலிருந்து பெரம்பலூருக்குப் போகும் வழியில் இருக்கிறது. இங்குள்ள மகாசாஸ்தா கையில் திருவுலா ஏடு வைத்திருக்கிருர். இவரை ''அரங்கேற்றிய ஐயனுர்'' என்று அழைக்கிருர்கள். சுந்தரமூர்த்தி நாயனுர் ''திருவஞ்சைக்களம்'' இறைவனை வணங்கிப் பின் வெள்ளை யானையின் மீதேறி கயிலை அடைகின்ருர். அவர் தோழன் சேரமான் பெருமான் நாயனுர் தம் குதிரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதினுர். அக்குதிரையும் மேலெழுந்து கயிலையை அடைந்தது. நாயனுரும் சிவனைத் துதித்து வணங்கி நின்ருர். சேரமான் நாயனுர் திருக்கையிலாயத்தில் சிவ சந்நிதியில் தாம் இயற்றிய ''திருக்கயிலாயத் திருவுலாவை''ப் பாடினுர். அதைக் கேட்டு மகிழ்ந்த மகாசாஸ்தா நினைவு கூர்ந்திருந்து ''திருப்பிடவூரிலே'' அதை வெளிப்படுத்தினுர் என்று சேக்கிழார் தெரிவிக்கிருர். கயிலையில் கேட்ட ''திருவுலா'' பாட்டு, தமிழ் நாட்டிற்கு சாஸ்தா மூலம் பரவிற்று.

ஈச்சங்குடி : திருவையாற்றிலிருந்து கும்பகோணம் போகும் பாதையில் நான்காவது மைலில் இருக்கிறது. ''உடைப்பங்கரை ஐயனுர்'' பூரணை, புஷ்கலையுடன் எழுந்தருளி பக்தர்களுக்குக் கனிந்தருளுகிருர். பண்டைக் காலத்திலிருந்து விளங்கி வரும் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வித்து சமீபத்தில் மகா கும்பாபிஷேகம் நடந்தது.

காஞ்சி காமாட்சி கோயிற் காவலை மேற்கொண்ட சாஸ்தா பற்றி ஒரு பழம்பாடல்:

"கச்சிவலைக் கக்கிக் காமக் கோட்டங் காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச் சாத்தான்கைச் செண்டு
கம்பக்களிற்று கரிகாற் பெருவளத்தான்
செம்பொன் கிரி திரித்த செண்டு." (சிலம்பு)

"செண்டு கொண்டு கரிகாலன் ஒருகால்
இமையமால் வரை திருத்தருள, மீள அதனைப்
பண்டு நின்றபடி நிற்க இது என்று முகில்
பாய் புலி பொறி பொறித்து அது மறித்த பொழுதே"
('கலிங்கத்துப் பரணி')

ஒரு சமயம் காஞ்சியை ஆண்ட கரிகாற் சோழன் உலகம் முழுதும் வென்று வரும்போது இமயமலை வழி மறித்தது. அரசன் காஞ்சிபுரத்தில் காமக் கோட்டம் என்ற காமாட்சி அம்மன் கோவில் காவலை மேற்கொண்ட சாஸ்தா வழங்கிய செண்டைக் கொண்டு இமயமலையை அடித்துத் தனது ஆட்கள் நடப்பதற்கு வழி செய்தான் என்று தெரிகிறது. இந்த தர்மசாஸ்தா சன்னிதானம் காமாட்சி அம்பாள் ஆலயத்தில் காயத்ரி மண்டபத்தின் மேற்குத் திக்கில் உள்ளது. பூரண புஷ்கலா என்ற தர்ம பத்தினி களுடன் அமர்ந்து காம கோட்டத்திற்குக் காவலாக அமையப் பெற்று இஷ்டார்த்த சித்திகளை அளித்துக் கொண்டு வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கீழாநிலக் கோட்டையில் யோக சாஸ்தா ஆலயம் இருக்கிறது. இது ஜீர்ணோத் தாரணம் செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற விருக்கிறது.

பொள்ளாச்சியில் ஐயனுக்கு ஒரு ஆலயம் இருக்கிறது. ஆலயத்தை புனருத்தாரணம் செய்வித்து சமீபத்தில் சபரி மலை ஆலய மேல் சாந்தி அவர்களால் மகா கும்பாபிஷேகம் நடந்தது.

பழநிமலையின் அடிவாரத்தில் ஐயப்பனுக்கு ஒரு ஆலயம் இருக்கிறது. திருவஞ்சிக் குளம் என்ற திருவஞ்சைக்

களம்- இது கேரளத்தில் கொடுங்கலூர் பகவதி கோயிலி லிருந்து ஒரு மைல் தெற்கில் இருக்கிறது. கோவில் வெளிப் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் ஓங்கி வளர்ந்திருக்கும் பெரிய மரத்தின் நிழலில் சாஸ்தா கோயில் தனியாக இருக் கிறது. இவர் வலது காலை குத்திட்டு இடக்காலை மடித்தபடி அமர்ந்திருக்கிறார். இந்தத் தலத்திலிருந்துதான் சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமான் நாயனாரும் திருக்கயிலைக் குச் சென்றார்கள். தமிழ் கலாசாரத்துடன் தொடர்பு கொண்ட இந்த கோயில் தான் தமிழ் நாடு கோயிலிலிருப்பது போல் "பள்ளியறை பூஜை" பழக்கம் இருந்து வருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் படவேடு (படைவேடு) என்னும் இடத்தில் ரேணுகா தேவிக்கு ஒரு ஆலயம் இருக் கிறது. அங்கு ஐயப்பன் யானை மீது அமர்ந்து காட்சி தருகிறார்.

திருநெல்வேலிச் சீமையில் சிங்கம்பட்டி மலையில் பாபநாசம் மேலணை சமீபம் சொரிமுத்து ஐயனார் கோவிலும் சீவலப்பேரி பூலாவுடையார் ஐயனாரும் மிகவும் பிரசித்தி வாய்ந்தவர்கள். அதுபோல் இராசவல்லிபுரம் சமீபம் செப்பரையில் பொருநை-மா-நதியின் வடகரையில் நல்ல தம்பி சாஸ்தா எழுந்தருளி இருக்கிறார். கோவில் சிறியது செப்பரை அழகிய கூத்தபிரானையும் நல்லதம்பி சாஸ்தாவையும் அகஸ்திய முனிவர் தரிசித்து வழிபட்ட தாகச் சொல்லுகிறார்கள்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

இதர தகவல்கள்

* உலகங்கள் எல்லாவற்றையும் ஆளுவதால் அவருக்கு சாஸ்தா என்ற பெயர் வந்தது.

* மகா சாஸ்தா, சத்ரு சாஸ்தா, ஜீவ சாஸ்தா, ஸர்வ சாஸ்தா. சாஸ்தா, பிரசாஸ்தா என்று ஐயனர் ஆறுவிதமாய் மகாலெக்ஷிமி கல்பத்தில் கூறப்பட்டு இருக்கின்றது.

திருநாவுக்கரசர் பாடிய பதிகம்—

''பார்த்தனுக்கு அருளும் வைத்தார் பாம் பரைஆட
வைத்தார்
''சாத்தானை மகனு கவைத்தார்''—சாமுண் டிசாம வேதக்
கூத்தோடு பாடவைத்தார். கொளரா
மதியம் நல்ல தீர்த் தமும் சடையில் வைத்தார்
திருப்பயற்றி ரனரே''

என்று பாடி இருப்பதிலிருந்து சாஸ்தாவை மகனுய்க் கொண்ட சிவபெருமானைப் போற்றி இருக்கிருர்—எனவே சாஸ்தா வழிபாடு தமிழகத்தில் தொன்று தொட்டு போற்றப் பட்டு வருகிறது.

தமிழ்நாட்டு கிராமங்களில் சாஸ்தா கிராம தேவதை யாக பூஜிக்கப்படுகிருர். மண்ணுலான பெரிய யானை, குதிரை உருவங்கள் இவர் ஆலயத்தில் முன் இருப்பதைக் கொண்டே இது ஐயனர் கோயில் என்று தெரிந்து கொண்டு விடலாம். ஆலயம் கிராமத்திற்கு வெளியில் தென்மேற்கு மூலையில் இருக்க வேண்டும் என்பது ஐதீகம்.

ஆர்ய தாதா என்பதும் இவருக்கு ஒரு பெயர். ஆர்யா என்ருல் பூஜிக்க தகுந்தவர், மதிப்பிற்குரியவர் என்பது பொருள். தாதா என்ருல் அப்பா. ஆர்யா என்பதின் திருபு ஐயன். எனவே ஆர்யா தாதா என்பது (ஐயப்பன்) என்று மருவி வந்திருக்கலாம். (ஐய்ய + அப்பன் = ஐயப்பன்)

* இளங்கோவடிகள் பூம்புகாரிலே சுப்பிரமணியர் இந்திரன் கோயில்களுடன் சமநிலையில் இருந்த சாத்தான் கோவிலை "புறம்பணையான் வாழ் கோட்டம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

———o———

உ

Swamiye Saranam Iyyappa

PRANAMS

to

LORD OF SABARIMALAI

A devotee

கலியுக ப்ரத்யக்ஷம்

திருவாரூர் ஸங்கீத மும்மணிகளில் ஒருவராகத் திகழ்ந்த ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் அவர்களால் இப்பெருமானைக் " கலியுக ப்ரத்யக்ஷம் " என்று வர்ணிக்கும்பாட்டு.

ராகம் : வஸந்தா　　　　　　　　　தாளம் – கண்டலகு

பல்லவி

ஹரிஹரபுத்ரம் சாஸ்தாரம் ஸதா பஜேSஹம்
மாயாகார்யம் த்யஜேSஹம்　　　　　(ஹரிஹர)

(அனுபல்லவி)

முரஹாரதி மோதித சபரி (சௌரி) கிரி விஹாரம்
முரளீ பேரீ வாத்யாதி ப்ரியம் கரம்

மத்யம காலம்

ப்ரார்த்தித புத்ராப்ரதம் வஸந்த நத ப்ருந்தம்
தீர்காயுஷ்ப்ரதம் தீனஜன ஸுகப்ரதம்　　　　　(ஹரிஹர)

சரணம்

பால்குந மாஸபௌர்ணமாவதாரம்
பாண்ட்ய கேரளாதி தேச ப்ரபாகரம்
புஷ்ப சரேக்ஷு கார்முகதரம்
புல்ல கல்ஹார கேயூர தண்டதரம்

மத்யம காலம்

கலியுக ப்ரத்யக்ஷம் கர்வித தக்ஷ சிக்ஷம்
வரகுரு குஹாந்தரங்கம் ரத கஜ துரங்கம்　　　　　(ஹரிஹர)

ஐயப்பன் பாட்டுக்கள்

(பல புத்தகங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை.
சொந்தக் கவனமல்ல)

காப்பு

அந்தணர் முனிவர் சூழ அற்புத சபையைப் போற்றி
மந்திரம் கையிலேந்தும் வாழ்குளத் தூரன் மீதில்
சிந்தையிலுதித்த தெல்லாம் செப்புமுன் கவி-விளங்க
ஸ்கந்தனும், குருவும், வாணி, கஜமுகன் காப்பதாமே,
சரணம் இதுவன்றி ஆவதில்லை, ஐயன்
தருணபதம் 'சாமீ சரணம்'—சரணம் எனத்
தாங்கும் ஒலி எங்கும் தழைக்க வருந்தொண்டரைக்
காக்கும் ஐயப்பன் கழல்.

ராகம்: செஞ்சுருட்டி] [ஆதிதாளம்

1. குளத்தூர்பாலா குணக்கொழுந்தே எங்கள்
   குற்றங்கள் பொறுத்தருள்வாய்
   ஆரியங்காவினில் ஆனந்த ரூபா
   அபயம் அபயம் ஐயப்பா
2. எருமேலியில் வளர் ஏழை பங்களா
   எங்களைக் காத்தருள்வாய்
   ஐந்து மலைக்கதிபா ஐங்கரசோதரா
   ஐயப்பனே சரணம்
3. கலியுக வரதா கலிமல நாசனு
   கருணாகர தேவா
   சத்ய பரிபாலகா சத்குண சீலா
   சபரிமாமலை வாசா
4. வீரமணி கண்டா விஜய குமாரா
   விஷ்ணு மோகினி பாலா
   சாந்த தயாபர சத்குரு நாதா
   சரணம் சரணம் ஐயப்பா

சூறம் மெட்டு

சபரிமலை தன்னில் வாழும் எங்கள் மணிகண்டன்.
சகலவேத சாஸ்திரியன் ,,
பக்தர் கவலை நீக்கிடுவார் ,,
முக்தியளித்து ஆதரிப்பார் ,,
வில்லணிந்த வீரசிவர் ,,
குளத்தூரில் குடிகொள்ளும் ,,
லோகமெங்கும் புகழ்பெற்றுர் ,,
நித்யப்ரும்ம சாரியான ,,
வேல் முருகன் தம்பியன்ரோ ,,
சிங்கம் தன்னில் ஏறிவரும் ,,
ஆரியங்காவு ஐயனிவர் ,,
ஞானவழி காட்டிடுவார் ,,
ஹரிஹரனின் மைந்தனுன ,,
அன்பர்களைக் காக்க வந்தார் ,,
பந்தளத்தில் வந்துதித்தார் ,,
பரப்ரும்ம மூர்த்தியான ,,
மஹிஷியை சம்ஹரித்தார் ,,
மோக்ஷவழி காட்டிடுவார் ,,
பேரும் புகழும் தந்திடுவார் ,,
நித்ய மங்கள மூர்த்தியான ,,

ஐயப்பனின் தினசரி தியானம்

கலியுக வரதனுன இப்பெருமானின் திருப்புகழ் பாடி சகல செல்வயோக மிக்க சுகவாழ்வு வாழ்வோமாக !

ஆர்யவம்ய சுஜாதா	நமோ நம	
வீர்யதிவ்ய விலாசா	,,	
சாஸ்வதாஸ்ரித தேவா	,,	—பஹுகோடி
பூதவந்தித தேவா	,,	
பீத நாசனரூபா	,,	
மோகனும்புஜபாதா	,,	—மணிகண்டா
ராஜ சேவக வீரா	,,	
வாஜிவாரண வாஹா	,,	
கீதந்ருத்யவினேதா	,,	—வீராதிவீரா
கோரபாய விநாசா	,,	
ஹார நூபுர தீரா	,,	
ஜோதிஷாஞ்சிதபீடா	,,	—ஜயசீலா
த்யானமங்கள ரூபா	,,	
கானனுந்தரவாசா	,,	
வாசவாஸ்ரித தேவா	,,	—நீருபதாசா
காந்தஸ்ருங்க நிவாசா	,,	
சாந்தி தாயக தேவா	,,	
தேவவந்த்ய கிரீஸா	,,	—பரதேவா
மூலமந்த்ர ஸ்வரூபா	,,	
பால விக்ரக மூலா	,,	
புத்ரதாயக தேவா	,,	—வரபாலா
ஈசகேசவ சூனே	,,	
பாரஜன் மவிநாசா	,,	
ஆர்த்தி நாசன கீர்த்தே	,,	—திவ்யரூபா

சுவாமியே சரணம் ஐயப்பா

தினசரி சொல்லக்கூடிய சரணங்கள்

1.	ஹரிஹர சுதனே	சரணம் ஐயப்பா !
2.	மோஹினி பாலனே	,,
3.	வன்புலி வாஹனனே	,,
4.	சபரிமலை வாஸனே	,,
5.	இருமுடி ப்ரியனே	,,
6.	எங்கள் குலதெய்வமே	,,
7.	நெய் அபிஷேக ப்ரியனே	,,
8.	ஸேவிப்பவர்க்கு ஆனந்தனே	,,
9.	கண் கண்ட தெய்வமே	,,
10.	இஷ்ட வரம் தருபவனே	,,
11.	சத் குரு நாதனே	,,
12.	கன்னிமலைக்காரர்களைக் காப்பவனே	,,
13.	கற்பூர ப்ரியனே	,,
14.	தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபனே	,,
15.	காந்தமலை ஜோதியே	,,
16.	பம்பா வாஸனே	,,
17.	அன்னதான ப்ரபுவே	,,
18.	கன்னிமூலை கணபதியே	,,
19.	மாளிகைப் புரத்தம்மா தேவிமஞ்ச மாதாவே	,,
20.	ஆரியங்காவி லய்யனே	,,
21.	எருமேலி தர்ம சாஸ்தாவே	,,
22.	ஜாதிபேதமில்லாதவனே	,,
23.	பராசக்தி பாலனே	,,
24.	குளத்தூரில் குடிகொள்ளும் பாலனே	,,
25.	சகல குற்றங்களையும் மன்னித்துக் காத்தருள வேண்டும் ஸத்தியமான பொன்னு பதினெட்டாம் படி மேல் வாழும் ஸ்ரீஹரி ஹரசுதன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா!	

சுவாமியே சரணம் ஐயப்பா